# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
தை 23
ஸபர் 26
ஞாயிறு (5-2-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 69
யாழ்: தொ.பே.இல. 352
விலை சதம் 60


# தமிழர் பிரச்சினையில் குடியரசுத் தலைவர் 'இட்லர்' ஆவாரா? 'அட்லி' ஆவாரா?

சிங்கள, தமிழ் ஈழ நாட்டினங்களின் தாயகமாகிய இலங்கையில் — சிங்கள நாட்டினத்தின் அதிகார ஆதிக்கப் பிடியிலிருந்து விடுபட்டு, தமது இறைமையையும், சுயநிர்ணய உரிமையையும் பயன்படுத்தி தமது விடுதலையை எப்படியும் மீட்டுக்கொண்டே தீருவது என்று தமிழ் ஈழ நாட்டினம் தீர்க்கமாகவும் தெளிவாகவும் உறுதியாகவும் ஜனநாயகரீதியில் முடிவு செய்து அதற்கான ஆக்கப் ப[illegible]களில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில்—சிங்கள நாட்டினம் தனது அரசியலமைப்பில் செய்துகொண்ட ஒரு பெரிய மாறுதலுக்கமைய, சம்பூரண நிறைவேற்று அதிகாரங்களைப் கொண்ட குடியரசுத் தலைவர் பதவியை சிங்கள நாட்டினத்தின் தலைவராகிய திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் பெப்ரவரி 4ம் திகதி ஏற்றுக் கொள்கிறார்.

எழுபத்திரண்டு வயது நிரம்பிய திரு. ஜெயவர்த்தன சிங்கள மக்களிடையே நிறைந்த அரசியல் அனுபவமும், விவேகமும், புத்திக்கூர்மையும், திட்டமிட்டு செயலாற்றி அதிலே வெற்றி வாகை சூடும் நுண்ணறிவும், தனிப்பட்ட முறையில் சிறந்த ஒழுக்கமும், பண்பாடும் கொண்ட ஓர் முதுபெரும் அரசியல் தலைவர் என்பதிலே யாருக்கும் இரு கருத்துக்கள் இருக்க முடியாது. இத்தகைய ஒருவர் குடியரசுத்தலைவராவதையிட்டு, சிங்கள மக்கள் குதூகலித்திடவோ, மகிழ்ச்சியடையவோ நியாயம் உண்டு.

ஆனால், ஆளும் இனத்திலே—அதன் அரசியலமைப்பிலே ஏற்பட்டிருக்கிற இந்த மாற்றத்தைக்கண்டு—ஜே. ஆர். ஜெயவர்த்தன குடியரசுத்தலைவர் பதவியை ஏற்பது கண்டு—ஆளப்படும் நிலையிலிருக்கும் தமிழ் தேசிய இனம் 'ஆஹா' என்று மகிழ்ச்சியடையவோ — அல்லது 'ஊஹூம்' என்று அதை எதிர்த்திடவோ வேண்டியதில்லை! ஆளும் சிங்கள இனம் தனது அரசியலமைப்பில் எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவந்த போதிலும் ஆளப்படும் இனமாகிய தமிழ் தேசிய இனம் தனது தாயகத்தின் விடுதலைக்காக போராடியே தீரவேண்டிய நிலையில்—ஜே. ஆர். குடியரசுத்தலைவராக விளங்கினாலென்ன அல்லது சிறிமாவோ விளங்கினாலென்ன — அது பற்றி தமிழ் மக்களுக்கு எதுவித அக்கறையும் ஆர்வமும் ஏற்பட முடியாது.

மக்களின் சுதந்திரங்களையும், அடிப்படை உரிமைகளையும், எப்பொழுதும் தாம் கௌரவிப்பதாக கூறிக்கொள்ளும் ஜே. ஆர்.—தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கி தமிழினப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பேன் என்று தேசிய பேரவையில் பகிரங்கமாக அறிவித்த ஜே. ஆர்—நாட்டின் மிக உயர்ந்த அதிகார பீடத்திலமர்வதால் அவர் தமது உறுதிமொழிகளை எப்படியும் காப்பாற்றுவார்—தமிழ் மக்களின் சுதந்திர அபிலாஷைகளை நிறைவு செய்வார் என்று நம்புகிறவர்களும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அந்த நம்பிக்கை நிறைவேறுமானால்—பலிதமாகுமானால்—ஜனாதிபதி ஜே. ஆர். அவர்கள் தமிழ் தேசிய இனத்தின் சுதந்திரத்தையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்து தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்வாரானால் — பிரிட்டிஷ் அரசு ஸ்கொட்லாந்துக்கு சுயாட்சி வழங்கியது போல — ஸ்பெயின் நாட்டு அரசு அண்மையில் அதன் பாஸ்க் இன மக்களுக்கு சுயாட்சி வழங்கியது போல — அந்த முன்மாதிரிகளை ஜனாதிபதி ஜே. ஆர். அவர்கள் பின்பற்றுவாரானால், உண்மையில் நம்மைவிட மகிழ்ச்சியடைபவர்கள் வேறுயாரும் இருக்க முடியாது!

ஆனால், ஜே. ஆர். அவர்களின் கடந்த 35 ஆண்டு கால அரசியல்சேவையைப் பார்க்கும்போதுதான் நமக்கு இதிலேபெரும் ஏமாற்றம் ஏற்படுகிறது. 35 ஆண்டுகாலம் அவர் செய்த அரசியல் சேவையில் பெரும் பகுதிதமிழர்களின் உரிமைகளைஅபகரிப்பதாகவேஅமைந்திருப்பதை கடந்தகால வரலாறு எடுத்துக்கூறுகிறது.

## எண்ணம்

சிங்களம் மட்டும் ஆட்சிமொழிமாக, போதனாமொழியாக, அரசாங்க சேவைப்பரீட்சைமொழியாக ஆக்கப்படவேண்டுமென்ற 1944ம் ஆண்டு சட்டசபைத்தீர்மானம்—15இலட்சம் மலையகத்தமிழர் குடியுரிமை, வாக்குரிமை பறிப்பு—தமிழ் பேசும்மக்களின் மரபுவழிப்பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற ஆக்கிரமிப்பு—'சிங்களம் மட்டும்' என்ற களனித்தீர்மானம்—பண்டா—செல்வா ஒப்பந்தத்துக்கு எதிரான பாதயாத்திரை—பௌத்தத்துக்கு முதலிடம் தரப்படவேண்டுமென்ற அரசியல் நிர்ணயசபைத்தீர்மானம்— சிங்களம் மட்டும் சட்டத்தை மாற்றமாட்டோம், தமிழ்மக்களுக்கு மரபுவழித்தாயகம் கிடையாது என்பனபோன்ற இன்னோரன்ன அண்மைய ஒரு தலைப்பட்சமான அறிவிப்புக்கள்—இப்படிப் பல்வேறு தமிழினவிரோத நடவடிக்கைகளை ஒவ்வொன்றாகப் புரட்டிக்கொண்டு போகும்போது அங்கெல்லாம் ஜே. ஆர். அவர்களின் திருமுகம் தான் தெரிகிறது.

எனவே கடந்த 35 ஆண்டுகாலம் ஜே ஆர். அவர்கள் ஆற்றிய அரசியல் பணிகளால் தமிழ் சமுதாயத்தின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன,பாதிக்கப்பட்டுள்ளனவேதவிர, தமிழ்மக்கள் அவரைப் பாராட்டும்படியாக அவர்செய்தது எதுவுமேகிடையாது; அப்படி தமிழினத்துக்கு ஏதாவது உருப்படியாக ஜே. ஆர். நன்மை செய்வாரென்றால் அதை இனித்தான் அவர் செய்ய வேண்டும்—அதாவதுஜனாதிபதிஜே.ஆர் தான்செய்யவேண்டும்.

ஒருமுறை தமிழ் ஈழத்தந்தை அமரர் மூதறிஞர் செல்வா அவர்கள் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் ஒரு விருந்தின்போது பின்வருமாறு கூறியிருந்தார்:—

"உம்மை நான் இப்போது வெறும் அரசியல்வாதியென்றே மதிக்கிறேன். நீர் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கி அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தீரென்றால்—அதன்பின்பே உம்மை ஓர் அரசியல் ஞானியென்று நான் பாராட்டுவேன்"

இப்போது சர்வாதிகாரமும் கொண்ட குடியரசுத் தலைவராகிவிட்டார் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா. தந்தை செல்வாவின் கூற்றுக்கமைய "அரசியல் ஞானியாக" தம்மை அவர் உயர்த்திக்கொள்ளக்கூடிய உன்னதமான வாய்ப்பு இப்போது அவருக்கு கிடைத்துள்ளது.

"தீப்த்தை வைத்துக்கொண்டு திருக்குறளும் படிக்கலாம்
தீயரெல்லாம் ஒன்று சேர்ந்து ஊரைக்கூட
கொளுத்தலாம்" என்றோர் தமிழ்ப் பாடலுண்டு.

சர்வாதிகாரமும் இப்போது ஜனாதிபதி ஜே. ஆரின் திருக்கரங்களிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது,

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கோரிக்கையில் புதிய குடியரசுத்தலைவர் 'இட்லர்' ஆக மாறுவாரா? அல்லது 'அட்லி' போல நடந்து கொள்வாரா? என்பதே இன்றுள்ள கேள்வி.


## திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர்!

நிகழும் பிங்கள வருடம் தை மாதம் 28-ம் திகதி (10-2-78) வெள்ளிக்கிழமை இரவு 9-05 மணி முதல் 10-05 மணிவரையிலுள்ள கன்னி இலக்கின நல்லோரையில்,

| | |
|---|---|
| எமது மூத்த புதல்வன் திருநிறை செல்வன் தங்கராசா அவர்கட்கும் (உள்நாட்டு இறைவரி திணைக்களம்) | எமது மூத்த புதல்வி திருநிறை செல்வி சரஸ்வதி அவர்கட்கும் |

மணமகள் இல்லத்தில் நடை பெறவிருக்கும் திருமண வைபவத்தில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| ச. நடராசா,<br>(அஞ்சல் அலுவலகம் பருத்தித்துறை)<br>தம்பசிட்டி,<br>பருத்தித்துறை. | சி. வேலுப்பிள்ளை,<br>(அரசினர் ஒப்பந்தக்காரர்)<br>"தமிழகம்"<br>புலோலி தெற்கு,<br>புலோலி. |




## அமரர் நாகா நினைவு விழாவும் நூல்வெளியீடும்

தமிழ் ஈழத்தின் இரும்பு மனிதரெனப் புகழப்பட்டவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூத்த தலைவர்களிலொருவருமான அமரர் டாக்டர் நாகநாதன் அவர்களின் நினைவு விழா எதிர்வரும் 5-2-78 ஞாயிறு மாலை நல்லூர் கல்யாண மண்டபத்தில் கொண்டாடப்படுகிறது. விழாவுக்கு நல்லூர் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் தலைமை தாங்குகின்றார்.

இவ்விழாவில் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ., சி. கதிரவேற்பிள்ளை பா. உ. உட்பட கூட்டணி பிரமுகர்கள் உரை நிகழ்த்துகின்றனர்.

திரு. கரிகாலன் எழுதி, சுதந்திரன் வெளியிட்டுள்ள 'மெழுகுவர்த்தி' எனும் அமரர் நாகநாதனைப் பற்றிய நூலும் வெளியிட்டுவைக்கப்படும். இந் நூலுக்கு சிலம்புச் செல்வர் மா. பொ. சி. முன்னுரை வழங்கியுள்ளார்.


ஈழத்தின் ஈடிணையற்ற இலக்கிய ஏடாம்

சுடர்
CHUDAR

மார்கழி—தை இதழ்

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் "சிறைச்சாலை இனிக்கும்" தொடர் கட்டுரை, கவிதைகளுடன்

இந்த வாரம் எங்கும் கிடைக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய உலகில் ஒரு கண்ணோட்டம்

நமது பத்திரிகைக் கடைகளில் நுழைந்தால் இப்போதெல்லாம் தென்னிந்திய—தமிழக சஞ்சிகைகள் கண்ணைப்பறித்தபடி காட்சியளிக்கின்றன. விலையோ இருமடங்கு மும்மடங்காக விற்கப்படுகின்றன. அவற்றுள் நல்லவையுமுண்டு; அல்லவையுமுண்டு. நீரைத்தவிர்த்து பாலை மட்டும் உண்ணும் அன்னப்பட்சிபோல, நமது இலக்கிய சுவைஞர்கள் நல்ல சஞ்சிகைகளை இப்போது வாங்கிப்படித்திடலாம். இலக்கிய வரட்சிக்கு இனி இடமில்லை—ஆனால் கையில் பணம்தான் வரட்சி!

தமிழ் சஞ்சிகை நடத்தும் ஓர் பத்திரிகை ஆசிரியரிடம் இது பற்றி பேசிக் கொண்டிருந்தேன் — தமிழக சஞ்சிகைகள் வந்து குவிந்துள்ளபடியால், அது உங்கள்சஞ்சிகையை பாதிக்காதா என்று கேட்டேன். அவர் தன்னம்பிக்கையுள்ளவர்'நிச்சயம் பாதிக்காது' என்றார். அதுமட்டுமல்ல — தமிழக ஏடுகள் வரத்தான் வேண்டும்—அப்போது தான் நமது இலக்கிய வளர்ச்சியை நாம் அளவு கோலிட்டுக் கொள்ள முடியும் என்றார். அந்த பத்திரிகையாசிரியரின் தன்னம்பிக்கை வாழ்க!

பத்திரிகைக் கடைகளில் தமிழக சஞ்சிகைகள் பலவற்றைக் கண்டாலும், ஒரேயொரு தரமும் பண்பும் நிறைந்த சஞ்சிகையைக்காண முடியாமலிருப்பது பெரும் வேதனையை அளித்தது ஆம், இலக்கிய உலகில் பல வரலாறுகளைப்படைத்த 'கல்கி' பத்திரிகையை காண முடியாததுதான் வேதனைக்கு காரணமாகும்.

'கல்கி' பத்திரிகை மூடப்பட்டது தமிழ் இலக்கிய சுவைஞர்களுக்கு ஓர் பேரிழப்பே!

* * *

'குமுதம்' பத்திரிகை, தமிழ் நாட்டுக்கு வெளியே தமிழர் வாழும் நாடுகளுக்கிடையே உலகத்தமிழ் சிறுகதைப் போட்டியொன்றை அண்மையில் நடத்தியது! இத்தப் போட்டியில் இலங்கைக் கதையொன்றுக்கு ரூபா ஐநூறு பரிசு கிடைத்துள்ளது 'ஞானம்' என்ற இப்பரிசுச் சிறுகதையை எழுதியவர் பெயர் 'ஜெபம் பவதாரிணி' இப்பெயர் இங்கு நமக்கு முன்பின் பரிச்சயமில்லாத பெயராககாணப்படுகிறது அல்லவா? குமுதம் சிறுகதை போட்டியில் பரிசைத் தட்டிக்கொண்ட இந்த எழுத்தாளர் தம்மை ஈழத்து இலக்கிய ரசிகர்களுக்கு வெளிக்காட்டிக் கொள்ளலாமே! இவரது பரிசு பெற்ற சிறுகதை குமுதம் 1977 டிசெம்பர் மாத 4 இதழ்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது;

* * *

பெருஞ்சித்திரனாரை ஆசிரியராகக் கொண்டு தமிழ் நாட்டிலிருந்து வெளியிடப்படும் மாசிகையான 'தென்மொழி', நவம்பர் 1977 இதழிலிருந்து 'இலங்கைத் தமிழர் பக்கம் என்ற குறிப்புடன் சில பக்கங்களை ஒதுக்கி. அந்தப்பக்கங்களில் ஈழத்தமிழர்களின் பிரச்சினைபற்றிய கட்டுரைகள் கவிதைகளை வெளியிட ஆரம்பித்துள்ளது. வரவேற்க பாராட்ட வேண்டிய முயற்சி!

* * *

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற செங்கை ஆழியானின் 'யானை' என்ற குறுநாவலை விமர்சனம் செய்து உரை யாற்றிய யாழ் வளாக விரிவுரையாளர் திரு.நா. சுப்பிரமணியம் தெரிவித்த ஒரு கருத்து, தமிழ் ஈழவிடுதலையில் நாட்டங்கொண்டுள்ள இலக்கிய படைப்பாளிகளின் கவனத்துக்குரியது. அவர் சொன்னார்—

"இலக்கியம், மக்களின் உணர்வுகளை, அபிலாஷைகளை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியென்று கூறுகிறோம். ஆனால், 1956ம் ஆண்டிலிருந்து இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தமது மொழியுரிமைக்கும் அரசியல் விடுதலைக்கும் போராடி வருகிறார்கள். ஆனால் இந்தக் காலகட்டத்தில் படைக்கப்பட்ட ஆக்க இலக்கியம் எதிலும், தமிழ்மக்களின் இந்த விடுதலைப் உணர்வு சித்திரிக்கப்படவில்லை. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களது அரசியல் சிந்தனையும், இலக்கிய சிந்தனையும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடானதாக கடந்த காலத்தில் இருந்து வந்துவிட்டது. இந்த நிலைமாற வேண்டும், தமிழ் மக்களின் அரசியல் சிந்தனைகளை மையக்கருத்தாகக் கொண்ட இலக்கியங்கள் எதிர் காலத்தில் உருவாக வேண்டும்" என்றார்.

திரு. சுப்பிரமணியத்தின் கருத்து நமது எழுத்தாளர்களின் நெஞ்சங்களில் தைக்கும் என்று எதிர்பார்ப்போமாக, இச்சமயத்தில் மற்றொன்று நினைவுக்கு வருகிறது. நமது பழம் பெரும் எழுத்தாளர் மூதூர் வ.அ.இராசரத்தினம் அவர்கள் தமிழர் விடுதலைப் போராட்டங்களை மையமாககொண்டு, ஆர்.கே. நாராயணனின் 'விடிவை நோக்கி' என்ற நாவலின் பாணியில், ஓர் நாவல் எழுத ஆரம்பித்திருந்தார். அந்த நாவலை அவர் விரைவில் நிறைவுசெய்து தமிழ் மக்களின் ஏக்கத்தை போக்குவார் என்று நம்புகிறோம்.




சி. ஜெகா,
உசன்,
மிருசுவில்.

கே: பிரிவினைத் தடைச் சட்டம் வந்துவிட்டதுஎன்று வைத்துக்கொள்வோம்; அப்போது கூட்டணியின் நிலையென்ன?

ப: தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொள்கை பிரிவினை அல்ல; விடுதலையே! ஒன்றாக இருந்ததை இரண்டாக்குவது பிரிவினை; இரண்டாக இருந்தது இரண்டாகவே இருக்கட்டும் என்று கேட்பது பிரிவினையாகாது. பிரிவினைத் தடைச்சட்டம் வருமானல், கூட்டணி தனது இலட்சியத்தை வென்றெடுப்பதற்கு பல்வேறு போராட்டமுறைகளையும் உபாயங்களையும் கையாளும்.

கே: 'கிழக்கிலங்கைத் தர்மர்' முளைப்பதற்குக் காரணம் காசி—இராசு சண்டையே என்கிறேன் நான்; உங்கள் பதில் என்ன?

ப: காசிக்கும், இராசுவுக்கும் தனிப்பட்ட சண்டை ஏதும் கிடையாது; கிழக்கில் கூட்டணி இயங்கவேண்டிய வழிமுறைகள் பற்றியே கருத்து வேறுபாடு, இந்தக் கருத்து வேறுபாட்டை கூட்டணியின் தலைமைப்பீடம் உரியகாலத்தில்தீர்த்துவைத்திருக்கவேண்டும்; சமாதானமாகத் தீர்க்கமுடியாவிட்டால் கட்டளை (RULING) பிறப்பித்திருக்க வேண்டும். அந்தக் கட்டளையை மீறுவோர் யாராயிருந்தாலும் அவர்களைத் தண்டித்திருக்க வேண்டும்; இதில் கட்சித் தலைமை தயக்கம்காட்டியதே காரணம் என்பது என் கருத்து;

ஃ

கே. ஏ. சோதிநாதன்,
பசறை.

கே: நல்லூர் 'சிவா'வைப் பற்றி தங்களுடைய கருத்து என்ன?

ப: தங்கமான. மனிதர் இன்று தமிழின ஒற்றுமையின் அடித்தளமாகத் திகழ்பவர். இலட்சியத்தில் சிறிதும் விட்டுக்கொடுக்காதவர். தெய்வபக்தி நிரம்பியவர்; மிகச்சிறந்த பண்பாளர்; அமைதி, அடக்கம், அறிவு, அனுபவம் நிரம்பியவர், தொண்டர்க்குத் தொண்டர். கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியன் ஆண்டிருந்த நல்லூர் மண்ணுக்கு ஏற்ற பிரதிநிதி.

ஃ

ஆனந்தி தயா,
வல்வை நகர்.

கே: தமிழ் நாடு எதிர்க்கட்சித்தலைவர் கருணாநிதிக்கும் இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்துக்கும் இடையேயுள்ள வேற்றுமை என்ன?

ப: கருணாநிதி இந்தியாவில் ஒரு மாநிலத்துக்குமட்டும் எதிர்க்கட்சித்தலைவர்; அமிர்தலிங்கம் இலங்கை முழுவதற்கும் எதிர்க்கட்சித் தலைவர், கருணாநிதிக்கிருக்கும் அளவு தமிழ் மொழிப் புலமை அமிர்தலிங்கத்துக்கு கிடையாது; அமிர்தலிங்கத்துக்கு இருக்கும் ஆங்கிலப் புலமை கருணாநிதிக்கு கிடையாது. போதுமா?

ஃ

ம. கௌரி சங்கர்,
துன்னாலை.

கே: ஐ. தே. க. வென்றவுடன் அக்கட்சியின் தலைவரை 'அரசியல் முதுபெரும் ஞானி' என்று அமிர்தலிங்கம் பாராட்டியதேன்?

ப: மாற்றான் வீட்டுமல்லிகையும் மணக்கும் என்ற அடிப்படையில்தான்! எதிரியின் ஆற்றலையும் பலத்தையும் சரியாகக் கணக்குப் போட்டு எமது போராட்டத்தை கொண்டு நடத்துவதிலேதான் எமது வெற்றி தங்கியிருக்கிறதே தவிர, எதிரியின் ஆற்றலை நாம் குறைத்து மதிப்பிடுவோமானல் நாம் போரில் தோற்றுவிடுவோம்! எதிரியின் திறமையை பாராட்டுவதுதான் ஓர் உண்மையான தளபதிக்கு அழகு! அதைத்தான் அமிர் செய்திருக்கிறார். இதில் என்ன பிழை?

கே: சுதந்திர வர்த்தக வலயம் யாழ்ப்பாணத்தில் அமைந்தால் கூட்டணியினர் அதை வரவேற்பார்களா?

ப: கூட்டணி சோசலிசக் கொள்கைகளையே ஏற்றுக் கொண்டிருக்கும் இயக்கம். அதனல் முதலாளித்துவத்துக்கு வழிவகுக்கும் சுதந்திர வர்த்தகவலயம் எங்கு நிறுவப்பட்டாலும் அதைக் கூட்டணி எதிர்க்கும்!

சி. குணசேகரம்,
வேலணை

கே: தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் இலங்கைக்கு வந்தால் அவரை தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள்தமிழ் ஈழத்திற்கு அழைத்துவரவேற்பார்களா?

ப: இதென்ன கேள்வி? நாலரைக்கோடி தமிழ்மக்களைக்கொண்ட தமிழ்நாட்டின் முதல்வராக வருகின்ற எம். ஜி. ஆரை—ஈழத் தமிழர்கள் இங்கு இனப்படுகொலைக்கு ஆளாகிய நேரத்தில் தமிழ் நாடு சட்டமன்றத்தில் அதைக் கண்டித்து தீர்மானம் போட்டு இந்திய அரசின் கவனத்தை நம்பால் திருப்பிய எம். ஜி. ஆரை—நமது தலைவர்கள் வரவேற்காமல் விடுவார்களா?

ஃ

அரு. சிவானந்தம்,
நடராசா வீதி,
வல்வெட்டித்துறை.

கே: கடந்த ஆறு வருடங்களாக எட்டு ருத்தல் தானியம் தருவேன் என்று சிங்கள மக்களுக்கு கூறிப் பதவிக்கு வந்த பிரதமர் ஜே. ஆர். பதவிக்கு வந்து 4 மாதங்களில் அரிசி, மா, சீனியை சம்பூர்ணமாகவே பறித்து விட்டாரே — சிங்களமக்களையே ஏமாற்றிய இவரா தமிழ் மக்களுக்கு உரிமை தரப்போகிறார்? இன்னும் பொறுத்திருப்போம் என்று கூறும் தமிழ்த்தலைவர்களைப் பற்றி என்ன நினைப்பது?

ப: தலைவர்கள் பொறுத்திருக்கும்படி கூறுவது ஜே. ஆர். உரிமைதரப்போகிறார் என்பதற்காக அல்ல; அவர் எதுவுமே தரப்போவதில்லையென்பதை அவரை நம்பியிருக்கும் ஊருக்கும் உலகுக்கும் நடைமுறையில் எடுத்துக்காட்டி, உலக அனுதாபத்தை நமது போராட்டத்தின் பால் திருப்புவதற்காகவே இந்தத் தற்காலிகப் பொறுமையை தமிழ்த்தலைவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்!

ஃ

செல்வி,
மலர் வழி சின்னத்துரை
ஹெந்தலை.

கே: ஐ. தே. கவுக்குப்பின்னல் அற்பசலுகைகளுக்காக வாலை ஆட்டித்திரியும் தமிழர்களை நினைக்க நெஞ்சம் குமுறுகிறதே? அவர்களை எப்படி அழைக்கலாம்?

ப: நாய்த்தமிழர்கள்!

ஃ

சி. நந்தகுயார்,
93/23 பாத்திமா வீதி,
திருகோணமலை.

கே: இராசதுரையைப் பற்றி சில வாக்கியம் சொல்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்;

ப: இன்று பத்திரிகைகளுக்கு பரபரபான செய்தியாகவும், நாலுபேர் கூடுமிடங்களில் அலசப்படும்மனிதராகவும் இராசதுரை விளங்குகிறார்!

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

1977ம் ஆண்டின் மூன்றும் காலாண்டு காலத்தில் ஈழத்துப்பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளியாகிய சிறு கதைகளை மதிப்பீடு செய்த 'தமிழ்க் கதைஞர் வட்டம்' வீரகேசரியில் வெளியாகிய திரு. ஜே ஆர். டேவிட்டின் 'தனியொருவனுக்கு' என்னும் சிறுகதையை சிறந்த கதையாகத் தெரிவுசெய்து கதாசிரியருக்கு பாராட்டிதழும், சன்மானமும் வழங்கிக் கௌரவித்துள்ளது.

தமிழ்க்கதைஞர் வட்டத்தின் இந்த இலக்கியப் பணி பாராட்ட வேண்டியதே!

— கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலசூரியாவின் வெளியீட்டில் பாரபட்சக் கண்ணோட்டம்!

'ஸ்ரீலங்கா'விலே இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதில் முன்னணி வகிப்பதாகக் காட்டிக்கொள்ளும் சிங்கள சுவாமியார் திஸ்ஸபாலசூரியா அவர்களின் வழிநடத்தலின்கீழ் இயங்கும் Centre for Society and Religion, தனது வெளியீடான 'Logos' (ஆகஸ்ட் 1977, செப்டம்பர் 1977) இதழ்களிலே "ஸ்ரீலங்காவிலே இன உறவுகள்" (Race relations in Sri Lanka) எனுந் தலைப்பிலே கவனஞ் செலுத்தியுள்ளது. இவ்விதழ்களின் பிரதான தொகுப்புக்களை ஆக்குவதில் சுவாமியார் தி. பா.வுக்கு முக்கிய பங்குண்டு என்பது சொல்லாமலே விளங்கும்.

இவ்விரு இதழ்களையும் அவற்றில் வெளிவந்துள்ள கட்டுரைகள், தொகுப்புக்கள் யாவையும் நோக்கும் போது இத்தீவின் இனப்பிரச்சினையானது, நடுநிலையில் நின்று நோக்கப்படாமல் 'சிங்களப் பக்கம் சார்ந்து, நோக்கும்பாணியில் அமைத்திருப்பது கண்டு நடுநிலை ஆய்வாளர்கள், அரசியல் மாணவர்கள் யாவரும்மனம் குறுகவேண்டி நேரிட்டுள்ளது. என் சிற்றறிவுக்கெட்டியபடி, இவ்வெளியீடுகளில் இடம் பெற்றுள்ள பக்கஞ் சார்ந்த அவதானிப்புக்களை நிரைப்படுத்துகின்றேன்.

(1) தொகுதி ஒன்றில், சமூக- பொருளாதாரப் பின்னணி பற்றி 14 அம்சங்களும்' தொகுதி இரண்டில் 8 அம்சங்கள், தமிழ்-சிங்கள மனத்தாங்கலும் உரிமைகளும், இனத்துக்கிடையிலான புரியுந்திறன் பற்றியும் அமைந்துள.

இத்தீவின் இனப்பிரச்சினை பற்றி, தகுந்த முறையில் நடுநிலை வழுவாமல் ஆராய்ந்து புத்தகங்கள் சிலவற்றை வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ளனர். இவற்றில் முக்கியமானவை வருமாறு:—

(1) இன்று, அமெரிக்கஸ்தானிகராக இலங்கையில் பணியாற்றும் மாட்சிமை தங்கிய Howard Wriggins அவர்கள் எழுதிய "CEYLON: DILLEM-MAS OF A NEW NATION" (1960) எனும் நூல்.

(2) B. H. Farmer அவர்கள் எழுதிய "CEYLON: A DIVIDED NATION" (1963) எனும் நூல்.

(3) பேராசிரியர் Robert N. Kearney அவர்கள் எழுதிய "Communalism and Language in the Politics of Ceylon" (1967) எனும் நூல்.

(4) Urmila Phadnis அவர்கள் எழுதிய "Religion and Politics in Sri Lanka" (1976) எனும் நூல்.

'லொகோஸ்' வெளியீடுகளில், இந் நான்கு பிரபல நூல்களில் ஒன்றைப் பற்றியாவது, ஒரு வரிகூட, எழுதப்படவில்லை. இவை பற்றி ஒரு குறிப்புக்கூட இடம் பெறவில்லை. இதுவா, சுவாமியார் தி. பா. அவர்கள் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ள 'In this and subsequent issues of 'Logos' we present some of the background documentation, analysis,..." ஆகியவற்றின் லட்சணம்!

மாறாக,குறுகிய கண்ணோட்டத்தில் நோக்கப்பட்டுள்ள பத்தேகம விமலவன்ச அனுநாயக்கதேரோவின் ஆய்வுக் கட்டுரையும் மற்றும் S. U. கோடிக்கார போன்றோரின் பக்கஞ் சார்ந்த ஆய்வுகளின் குறிப்புக்களும் இடம் பெற்றுள்ளன. இதுவா சமூக தர்மம்?

(2) தரப்படுத்தல் பற்றி, 'சிங்கள தருண சனவிதானய' பிரதமருக்கும் கல்வியமைச்சருக்கும் அனுப்பிய இனவெறியைத் தூண்டும் மகஜரை "A view point" என்று சுவாமியார் தி. பா வெளியிட்டுள்ளார். கடந்த ஏழாண்டுகளாக தினமும் அரசு ஊதுகுழல்களிலும் மற்றும் சஞ்சிகைகள் இதழ்களிலும் எத்தனையோ கட்டுரைகள், அறிக்கைகள், கடிதங்கள் போன்றவை பெற்றோர்களின் உள்ளக்குமுறல்களாக ஆசிரியர்களின் மனவெழுச்சிகளாக வெளிவந்தனவே! இவற்றை சுவாமியாரின் கண்கள் காணவில்லையா? ஏன், சில துணிவுள்ள சிங்களக் கல்விமான்களே (உதா

## நடுநிலை தவறிய 'லோகோஸ்' அறிக்கை தமிழர் கருத்துக்கள் இருட்டடிப்பு!

ரணத்துக்கு சிரேஷ்ட வரலாற்று விரிவுரையாளர் கலாநிதி சி. ஆர். டி. சில்வா, வணக்கத்துக்குரிய மேற்றிராணியார் அபேநாயக்கா போன்றோர்) தரப்படுத்தலால் தமிழ் மாணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஆய்வுக்கட்டுரைகளும், அறிக்கைகளும் வெளியிட்டனரே. இவற்றை தி.பா. வேண்டுமென்றே புறக்கணித்து விட்டாரா?

(3) பண்டா — செல்வா ஒப்பந்த விபரத்தைக் குறித்து விட்டு, ஒரு 'பெட்டி'க்குள், "This pact whose implementation may have gone a long way to resolve Sinhala — Tamil problems was eventually abrogated unilaterally by Mr. S W.R.D. Bandaranaike in April 1958 due to political pressure." என்று மட்டும் குறிக்கப்பட்டுள்ளது.

பண்டா—செல்வா ஒப்பந்தத்தை நிர்மூலமாக்குவதில் முன்னின்றவர்களின் பெயர் விபரங்கள் ஏன் கொடுக்கப்படவில்லை? "கண்டி யாத்திரை" போனவர்தான் இப்போ அரசு தர்பார் நடத்துகிறார், அவர் மனம் கோணக்கூடாது என்ற அடிமைப் புத்தியா? அதைத்தான் தவிர்க்க நேர்ந்தாலும் எப். ஆர். ஜெயசூரியாக்கள், கே. எம். பி. ராஜரத்தினாக்கள், ஆர், ஜி. சேனநாயக்காக்கள், மெத்தானந்தாக்கள் போன்றோரின் விஷமக்கும் ஆர்ப்பாட்டந்தான் பண்டா—செல்வா ஒப்பந்தத்தை நிர்மூலமாக்கியது என்பது எதிர்கால சந்ததிக்கும் பிறநாட்டாருக்கும் தெரியவரக்கூடாது [illegible]

(4) த. வி. கூ. யின் 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைப் பிரகடனம், த.வி.கூ. யின் 1977 தேர்தல் விஞ்ஞாபனம் ஆகியன இடம் பெற்றுள்ளன. ஆனால், சுவாமியார் தி.பா.வின் திரட்டிலே, 1976ம் ஆண்டிலே தளபதி அமிர் அவர்களும் கூட்டணித் தேசியப் பேரவை உறுப்பினர்கள் "ரத்தினங்கள்" மூவருக்கும்எதிராக அரசால் தொடரப்பட்ட பாரதூரமான 'ட்ரயல் - அற் - பார், வழக்கு பற்றிய விவரமோ, 'அமிர் அடையும் அவமானம் தமிழினத்தின் அவமானம்' எனவுணர்ந்து, தள்ளாத வயதினிலும் தளம்பாத மதியுடனே அம்மையாரின் அரசு உண்டாக்கிய அநியாய அவசர காலச்சட்டத்தை அக்குவேறு ஆணிவேறாகக் கிழித்துச் சட்டச்சமரில் வெற்றிவாகை சூடி, தமிழின எதிரிகளைத் தலைகுனிய வைத்த த.வி.கூ. தலைவர் அமரர் ஜீ, ஜீ. எழுப்பிய சட்ட நுணுக்கங்கள் பற்றியோ, அதன் விளைவுகள் பற்றியோ, அமரர் திருச்செல்வத்தால் ஆணித்தரமாக எடுத்தியம்பப் பெற்ற ஈழம் நாட்டின் சரித்திர எல்லைச் சான்றுகள் பற்றிய வாதங்கள் பற்றியோ, அம்மையாரின் அரசுக்குப் பாதகமாக அமைந்த உயர்நீதி மன்ற நீதிபதிகளின் சரித்திரப் புகழ் பெற்ற தீர்ப்புப் பற்றியோ. அரசு செய்த மேன்முறையீடு பற்றியோ. ஈற்றில் நீதிக்குத் தலைசாய வேண்டிய நிர்ப்பந்தத்தில், தளபதி அமிர் மீதுதொடுத்த வழக்கை அரசு மீளப்பெற வேண்டி நேரிட்டது பற்றியோ ஒரு தகவல் கூட இடம்பெறவில்லையே ஏன்? அம்மையாரின் அரசு, தமிழ்த் தலைவர்கள் மீது தொடுத்த இவ்வழக்கால் இன உறவிற்கு ஏற்பட்ட பங்கம் பற்றி சுவாமியார் தி.பா ஒரு வரி கூட செப்பவில்லையே, ஏன்?

(5) 1977ம் ஆண்டுத் தேர்தலை நோக்குவோம். தமிழீழம் பற்றிய வாக்குக் கணிப்பு பற்றிய தன்னுடைய புள்ளிவிவர ஆய்வை சுவாமியார் தி. பா. வெளியிட்டுள்ளார். இப்புள்ளி விபர ஆய்வில் ஏற்பட்டுள்ள குறைகள், நழுவல்கள் போன்றன மிகத் தெளிவாக, எஸ். ஸ்ரீகாந்தாவாலும் (Tribune 22.10.77), அருட்திரு ஜோசப் மேரி அவர்களாலும் (Tribune 12.11.77) சுட்டிக்காட்டப்பட்டன. ஆனால், இவ்விருவருடைய கருத்துக்கள், சுவாமியார் தி. பா. வின் திரட்டில் இடம் பெறவில்லையே. ஏன்?

(6) 1977ம் தேர்தலில், த. வி. கூ. மட்டுமே இனவாதத்தைப் பிரச்சாரகளமாக்கியது, வேறெந்தக் கட்சியும் இனவாதத்தில் ஈடுபடவில்லை, எனுங் கருத்துப்பட சுவாமியார் தி, பா. எழுதியுள்ளார், அத்துடன் தமிழ் இனவாதத்திற்கு விழும் வாக்குகள் குறைகின்றதாம்! (ஆம், சம உரிமை கேட்டு தமிழர்கள் கிளர்ந்தெழும் போது. சுவாமியாருக்கு அது "தமிழ் இனவாதமாகத்" தென்படுகிறது, என்னே, சமூக நீதி!)

அது சரி, வாதத்துக்காக வேனும், தமிழ் இனவாத வாக்குகள் குறைந்து கொண்டு போகின்றது என வைத்துக் கொண்டாலும், சிங்கள இனவாதத்துக்கும் விழும் வாக்குகள் கூடிக் கொண்டல்லவா செல்கின்றன! 1965ம் ஆண்டுத் தேர்தலில், அப்போதுஎம்.பியாக இருந்த இடது சாரித்தலைவர் எட்மண்ட் சமரக்கொடி தனது தொகுதியிலேயே 300க்கும் கீழான வாக்குகள் பெற்று, கட்டுப்பணத்தை இழந்து பெற்ற படுதோல்வியே இதற்குச் சான்று! சமரக்கொடி செய்த பாவம்; தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து கோரி, சிங்கள மக்கள் முன் வாக்குக் கேட்டது தான். இதே சமரக்கொடி. 1947ம் ஆண்டுத் தேர்தலிலே ஆனைப்பட்ட டீ.எஸ். சேனநாயக்காவுடன் போட்டியிட்டு 10,000 வாக்குகளுக்கு மேலாகப் பெற்றாரே! சுவாமியார் தி. பா. இதற்கென்ன பதில் கூறுவார்?

சிங்களக் கட்சிகள் இனவாதத்தை மட்டும் வளர்க்கவில்லை. மதவாதத்தையும் சேர்த்து வளர்த்துள்ளன; 'களனித் தொகுதியானது, பெரும்பான்மை பௌத்தர்

'சிந்தா'

களைக் கொண்டிருந்தும், மீள மீள ஒருகத்தோலிக்கரையே தெரிந்தெடுத்து அனுப்புவது ஜே. ஆருக்கு ஒரு புதிராக இருந்தது" என்று டிசநாயக்கா என்பவர் தனது "ஸ்ரீ லங்காவின் ஜெயவர்த்தனா" எனும் நூலில்எடுத்தியம்பியுள்ளார் (இந்த ஆசாமிக்கு, இந்தோனேஷியா அம்பாஸிடர் பதவி வழங்கப்பட்டுள்ளது. எனப் பத்திரிகைச் செய்திகள்தெரிவிக்கின்றன. நகைச்சுவை மன்னன் தங்கவேலு ஒரு படத்தில் கூறியது நினைவுக்கு வருகிறது. "200ரூபா கொடுத்தால் ஆப்பிள் ஜூசு 400ரூபா கொடுத்தால் ஆட்டுக்கால் சூப்பு". இதைப் போல. 'அகமதிதுமா ஜயவர்த்தனா" பற்றி புத்தகம் எழுதினால் அம்பாஸிடர் பதவி; "ஜனாதிபதி ஜயவர்த்தனா"பெயரில் நகரமெழுப்பு பவர்க்கு உப-ஜனாதிபதி பதவியும் கிடைக்கும போலும்- இந்த 'தர்மிஷ்ட யுகத்தில் அது வேறுவிடயம்)

(7) முஸ்லீம் சமூகம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுரையில் கந்தப்பா என்பவர், திரு. எஸ். ஏ. ராஷீட், டாக்டர் எம். சி, எம். கலீல் ஆகிய இருவரையும் பேட்டி கண்டு இவ்விருவருடைய சொந்தக் கருத்துக்களைக் கொண்டு (personal opinion) சிங்கள - முஸ்லீம் உறவுகளை விளக்கியுள்ளார். இரு தனிப்பட்ட அங்கத்தவர்களின் கருத்துக்களை மட்டும் வைத்துக் கொண்டு. எப்படி ஒரு முழுச் சமூகத்தின் நாடித் துடிப்பை அறிய முடியும்?

இத்தனைக்கும், டாக்டர் கலீல் யூ. என். பீ. யின் பொருளாளர், அதாவது, ஒரு குறித்த சிங்களக்கட்சியின் அபிமானி. எனவே, இவருடைய கருத்து பக்கச் சார்புடையதாகவேயிருக்கும் என எல்லோராலும் ஊகிக்கமுடியும். மேலும், கலீலும் சரி, ராஷீட்டும் சரி கொழும்பில் வாழும் சீமான்கள். தமிழ்ப்பகுதிகளில் வாழும் (கிழக்குமாகாணம், மன்னார், யாழ்ப்பாணம்) முஸ்லீம்கள் இவ்விருவரின் கருத்துக்களை ஏற்பார்களா? சுவாமியார் தி. பா, பதில் கூறவேண்டும்;

மேலும், ராஷீட் எனும் பிரமுகர் செப்பியுள்ள கருத்துக்கள் அவரின் "ஞானசூனியத்தை" அப்பட்டமாக வெளிக்காட்டுகின்றன. அவர் கூறுகிறார்: "Muslims and Tamils have nothing in common, be it cultre, outlook on life or religion. Although the Language of the Muslims is Tamil, each group speaks a different dialect."

மதத்தால் மட்டும் வேறுபட்டு நிற்கும் இஸ்லாமிய மக்கள், தமிழர்களுடன் ஒரு வழியிலும் பொதுத்தன்மை கொண்டிருக்கவில்லையாம்! இன்றுகூட, கிராமியச் சூழலிலே கிழக்கிலங்கையிலும் சரி, மன்னார் மாவட்டத்திலும் சரி, நாட்டுப்பாடல்கள் இன்னோரன்ன கலாச்சாரப் பண்பாடுகளிலும் தமிழைப் பேணுவதில் முஸ்லீம் பெண்மணிகளுக்கு நிகர் அவர்களே என்பது, கொழும்புச் சீமான்களுக்கு எங்கேதெரிய வரப்போகின்றது? எந்தச் சிங்கள மாவட்டத்திலாவது முஸ்லீம் பெண்கள் சிங்கள மொழியில் நாட்டுப்பாடல்கள்பாடி, சிங்களக் கலாச்சாரத்தைப் பேணிவருகின்றார்களா?

மேலும், 1976 பெப்ரவரியில் புத்தளத்து மசூதியில் நிகழ்ந்த கொலைகள் பற்றிய விபரங்களை சுவாமியார் தி. பா; ஏன் மறைந்துவிட்டார்? புத்தளத்தில் மட்டுமல்லாமல், கம்பளை, ஹேனமுல்லை, அளுத்கமை, கிழக்கிலங்கைப் பகுதிகளிலும்

— 6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகி நடராசன் மீது ஆணை!

## போதனு மொழியில் ஒரு பொறிக் கிடங்கு

அன்பு நண்பா

என்னுடைய சிந்தனை 21 ஆண்டுகள் பின்னோக்கிப்பாய்கிறது—அதாவது 1957ம் ஆண்டு மாசித் திங்கள் 4ம் நாளுக்கு; ஆம், அன்றைய தினம் தான் முதல் தடவையாக இலங்கையின் சுதந்திர நாளைப்பகிஷ்கரித்து ஈழத்தமிழ் சமுதாயம் வீறு கொண்டெழுந்தது. சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம உரிமை என்று பல்லாண்டுகளாக இருந்த நிலை மாற்றப்பட்டு, தமிழன் கொட்டிய இரத்த ஆற்றுக்கு மத்தியில் சிங்களம் மட்டும் என்ற ஏகாதிபத்திய மொழிச்சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து வந்த சுதந்திர நாளை தமிழினம் வீறுடன் வேங்கைபோல பொங்கியெழுந்து கரிநாளாக — அனுட்டித்தது. ஊரெங்கும் கடைகள் அடைக்கப்பட்டன; நகரெங்கும் வெறிச் சோடிக் கிடந்தன; போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்தன; காணுமிடமெங்கணும் நீக்கமற கருங்கொடிகள் நிறைந்தன; தமிழினத்தின் தானைத் தலைவர்கள் களத்திலே நின்றனர்; தமிழ் மாணவ சமுதாயம் தோள்தட்டி ஆர்ப்பரித்து எழுந்தது; யாழ் மாநகர் அதிர்ந்திடும்படி சிங்களம் மட்டும் சட்டத்துக்கும், ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கும் பறையொலி எழுப்பி மரண உர்வலம் நடை பெற்றது; இரு சட்டங்களும் தீக்கிரையாக்கப்பட்டன; தமிழ் சமுதாயம் தன்னுடைய எதிர்ப்புணர்வை திட்டவட்டமாக வெளிப்படுத்தியது!

இதே நாளில்தான் வீரர்கள் கோட்டமாம் திருகோணமலையில் அந்த மெய் சிலிர்த்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது. எங்கும் கருங்கொடிகள் பறந்திடட்டும் என்ற ஆணைபிறந்தது திருகோணமலையெங்கும் கறுப்புக்கொடிகள் வான் முட்ட எழுந்தன; ஆனால் ஒரேயொரு இடத்தில் மட்டும் கறுப்புக் கொடியேற்றப்படவில்லை திருகோணமலைச் சந்தைக்கட்டடத்தில்தான் கறுப்புக் கொடி உயரவில்லை; திருகோணமலையில் வந்து குடியேறி, அதை இன்று ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இனத்தினர் சந்தைக் கட்டடத்தில் கறுப்புக்கொடி யேற்றிட விடமாட்டோம் என்றனர்; கறுப்புக்கொடி ஏற்றப்பட்டால் ஏற்றுபவர்களின் உயிர்பறிப்போம் என்றனர்; இதுகண்டு உள்ளம் கொதித்தது அந்த வீரனுக்கு; எங்கள் தமிழ் மண்ணில் — இராவணனார் பொன் மண்ணில் ஒரு அங்குலமும் இனி நாங்கள் அயல் வெறியர் ஆளவிடோம்—எமது சொந்த மண்ணில் வந்தேறிகள் வாலாட்டுவதா? என்று குமுறியெழுந்தான் அந்த இளைஞன். கையில் பென்னம் பெரிய கறுப்புக் கொடியொன்றை எடுத்துக் கொண்டான்; வாழ்க தமிழ்த் தாய் வாழிய தமிழ் ஈழம் என்று முணுமுணுத்துக் கொண்டான்; மளமளவென்று அந்தக்கட்டடத்துக்கு மேலே ஏறினான் அந்த மாமறவன்; அடுத்தகணம் கறுப்புக் கொடி வான்முட்டப் பறந்தது; அது கண்டு அவன் உள்ளம் நிறைந்தது.



அச்சமயம் எங்கிருந்தோ வந்த துப்பாக்கிக் குண்டுகள் அவன் நெஞ்சில் பாய்ந்தன; 'தமிழ் வாழ்க' என்று ஒலியெழுப்பியபடி இரத்த வெள்ளத்தில் சாய்கிறான் அந்த இலட்சிய வீரன்; இனவெறிபிடித்த ஓநாய்கள் அந்த தியாக வீரனின் உயிரைக் குடித்தன; ஆம், அவன்தான் ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தில் தியாகஒளி வீசிக்கொண்டிருக்கும் திருமலைத் தியாகி நடராசன்!

அந்த இலட்சிய வேங்கை — தியாகத்திருமறவன்—திருக்கோணமலை தந்த இயக்கத்துக் கண்மணி—தந்தை செல்வாவின் நிலைகுலையாத் தொண்டன் — நடராசன் தன்னைப்பலிதந்து இந்த பெப்ரவரி 4ம் நாளுடன் 21 ஆண்டுகள் முற்றுப்பெறுகின்றன. இருபத்தொரு ஆண்டுகள் ஆனாலும் என்ன — இரு நூறு ஆண்டுகள் ஆனாலுமென்ன—அவனைப்போன்ற இலட்சிய வீரர்கள் தாம்—அவர்கள் செய்ததியாக வேள்விகள் தாம்—இந்த இயக்கத்துக்கு — தந்தை செல்வா உருவாக்கித்தந்துவிட்டுச்சென்றுள்ள தமிழர் விடுதலை அணிக்கு அடிப்படையாக—ஆதார சக்தியாக இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கின்றன;

இந்த இயக்கத்தில்—தன்னைத்தானே அர்ப்பணித்துக்கொண்டு இனத்தின் விடுதலையை மீட்கும் இந்த இயக்கத்தின் பின்னால் இன்றைக்கு இலட்சோபலட்சம் தமிழ்மக்கள் அணிவகுத்து நிற்கிறார்கள் என்றால்—திருமலை நடராசனும், அவனைப் போன்ற அவனுக்குப்பின் வந்த ஏராளமான தியாக வீரர்களும்தான் காரணம் என்பதை யாரே மறுத்திடமுடியும்'

தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ் மரபு, தமிழர் கலாசாரம், தமிழர் தாயகம் காத்திடுவதொன்றே குறிக்கோளாகக் கொண்டு தந்தை செல்வாவும் அமரர்வன்னிய சிங்கமும் இரும்பு மனிதர் நாகாவும் இன்னும் பல தலைவர்களுமாக சேர்ந்து உருவாக்கிய இந்த எஃகுப் பாசறையொன்று பாறைபோன்று இருப்பதனாலேயே சிங்கள ஏகாதிபத்தியத்தினால், தமிழ் இனத்துக்குள் ஊடுருவ இதுகாலவரை முடிந்தில்லை; இது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை!

இந்த இன எழுச்சியை — உணர்ச்சியை, விடுதலை வேட்கையை கொட்டிக்குலைத்து திசைதிருப்பும் ஒரு சதித்திட்டத்துடனேயே மும்மொழித்திட்டம் என்ற மோகினியை கல்வியமைச்சர் உலவவிட்டிருக்கிறார்!

திருமணவயதை எட்டிப்பிடித்திடும் ஓர் இளைஞனுக்கு முன்னால்—அழகான இளம்பெண்ணொருததியை அரைகுறைஆடையுடன கொண்டு வந்து நிறுத்தி விட்டு—நீ இவளுடன் கட்டாயமாக சல்லாபிக்க வேண்டியதில்லை; விரும்பினால் சல்லாபிக்கலாம், விருப்பமின்றேல் விடலாம் என்று கூறுவதுபோல சிங்களத்தை மட்டுமே ஆட்சிமொழியாக்கி விட்டு, சிங்களம் படித்தாலே பதவி, வேலைவாய்ப்பு என்றெல்லாம் சட்டங்களையும் போட்டுவிட்டு, சிங்களத்தைப் பாடசாலைகளில் ஒரு பாடமாகவும் புகுத்தி விட்டு, சிங்களம் படிக்கவேண்டிய கட்டாயமில்லை—விரும்பினால்மட்டும் சிங்களம் படிக்கலாம் என்று கல்வியமைச்சர் கூறுகிறாரென்றால்—இது அரசியலில் 'டாப்பர் மாமா' வேலையின்றி வேறென்ன?

ஆனால், தமிழ் கன்னியையே நெஞ்சாரக் காதலிக்கும் தமிழ் மாணவன்—ஒருவனுக்கு ஒருத்தி என்ற தத்துவத்தை வாழ்க்கை நெறியாக கடைப்பிடிக்கும் தமிழ் நெறியில் வந்தவன்—சிங்களம் என்ற பரத்தையிடம் தன் உள்ளத்தை நிச்சயம் பறிகொடுத்திடப்போவதில்லை; கல்வியமைச்சரின் "டாப்பர் மாமா" வேலை, தமிழ் மாணவ சமுதாயத்திடம் பலித்திடப்போவதுமில்லை!

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த கல்வியமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தின ,கரவெட்டி நாகவிகாரையில் பேசும்போது கூறியுள்ள ஒரு கருத்து, மிகவும் ஆபத்தானதும் கல்விமான்களால் கடுமையாக எதிர்க்கப்படவேண்டியதுமான ஒரு கருத்தாகும்.

ஒரு பிள்ளை தனது தாய்மொழியிலேயே கல்விபெறவேண்டும்; தாய்மொழியிலேயே கல்வியூட்டப்படவேண்டும்; அப்போதுதான் அப்பிள்ளையின் அறிவு வளர்ச்சி கூர்மையடையும்—மனவளர்ச்சி ஏற்படுமென்பது உலக கல்வி நிபுணர்களும் அறிஞர்களும் ஏற்றுக் கொண்டுள்ள ஒரே முடிவாகும். சோசலிச நாடுகளும் சரி கம்யூனிச நாடுகளும் சரி, ஜனநாயக நாடுகளும் சரி இந்த முடிவை ஏற்றுக் கொண்டுள்ளன; தத்தம் நாடுகளில் அதையே பின்பற்றி வருகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை உரிமை சாசனத்திலும் இந்தத் தாய்மொழிக் கல்வியுரிமை மிகவும் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் வரையறுத்துக்கூறப்பட்டிருக்கிறது.

ஆனால், ஐ. நா. மனித உரிமை சாசனத்தையே தமது அரசியலமைப்பிலும் இடம் பெறச்செய்யப்போவதாக கூறிக்கொள்ளும் இலங்கை அரசின் கல்வியமைச்சர் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

"இந்நாட்டில் உள்ள மாணவர்கள் எவரும் தாம் விரும்பிய மொழிகளில் கல்விகற்க மாணவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்துகொடுப்போம்."

என்று ஏதோ தமக்கு பெரிய'விரிந்த உள்ளம்' இருப்பதுபோல காட்டிக்கொண்டிருக்கிறார் கல்வியமைச்சர்; அத்துடன் அவர் நின்று விடவில்லை—தமிழ்ப்பிள்ளைகள் சிங்களப் பாடசாலைகளில் கல்விகற்றுவருகிறார்கள்என்றும், முஸ்லிம்பிள்ளைகள் சிங்கள, இந்துப்பாடசாலைகளிலும் கல்விகற்றுவருகிறார்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார்!

ஆனால் ஒன்றைக் கவனிக்கவேண்டும்; சிங்களப் பிள்ளைகள் தமிழ்ப்பாடசாலைகளிலோ, முஸ்லிம்பாடசாலைகளிலோ படித்துவருவதாக அவர் குறிப்பிடவேயில்லை!

சிங்களப்பிள்ளைகள் தமிழ்ப்பாடசாலைகளிலோ முஸ்லிம்பாடசாலைகளிலோ படிக்கவேண்டிய எந்த அவசியமும் இல்லை; அவர்களுக்குப் பாடசாலைப் பற்றாக்குறையுமில்லை! அவர்கள்தமிழில் படிக்க சட்டமும் இடம்தராது!

ஆனால் அமைச்சர் கூறியதுபோல எங்கோ ஒரு சில இடங்களில் தமிழ்பிள்ளைகள் சிங்களப் பாடசாலைகளில் கல்விபயிலும் வெறுக்கத்தக்க சூழ்நிலை நிலவுகிறதென்றால்—போதிய தமிழ்ப் பாடசாலைகளை தமிழ் மக்களுக்கு அரசு உருவாக்கிக்கொடுக்காமல், அவர்கள் சிங்களப் பாடசாலைகளுக்கே போகவேண்டிய கட்டாயத்தை வேண்டுமென்றே தோற்றுவிப்பது தான் ஒரே காரணம்!




நண்பா, இந்தநாட்டில் ஒருசிங்களப்பிள்ளைக்கு அதன் தாய்மொழியிலேயே கல்வியூட்டப்படவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆட்சியும் அவர்களிடம்; ஆட்சிமொழியும் அவர்களது மொழியே! ஆனால், தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை—தங்கள் போதனாமொழி எதுவென்பதை தமிழ் மாணவர்களும் பெற்றோர்களுமே தீர்மானிக்கலாமாம். ஆஹா, தமிழர்கள் மீது எத்தனை காருண்யம், பார்த்தாயா?

தமிழ் மாணவர்களின் போதனா மொழியை அவர்களே தீர்மானிக்கட்டும் என்று இது விஷயத்தில் காட்டப்படும் 'பரந்தமனப்பான்மை'யின் உள்ளே காணப்படும் நஞ்சு உனக்குத் தெரிகிறதல்லவா? சிங்களத்தை மட்டுமே நாட்டின் ஏகபோக ஆட்சி மொழி—உத்தியோக மொழியாக வைத்துக் கொண்டு—அந்த மொழியைப் படித்தாலே வாழமுடியும் என்ற நிலையை ஏற்படுத்திக்கொண்டு-அதே நேரத்தில போதனாமொழியை தேர்ந்தெடுக்கும் உரிமையை தமிழ் பெற்றோர்களிடமே விட்டு விட்டால்—சிங்கள மொழியையே காலஞ்செல்ல செல்ல தமிழர்கள் போதனாமொழியாக ஏற்றுக் கொண்டுவிடக்கூடும் என்ற ஒருநப்பாசையுடன் ஒரு திட்டமிட்ட சூழ்ச்சியாக இந்தப் பொறிக்கிடங்கு வைக்கப்பட்டிருக்கிறது.

இப்போது சூழ்ச்சி புரிகிறதல்லவா? சிங்களம், விருப்பபாடம்,கட்டாயமில்லை, என்றெல்லாம் கூறப்பட்டபோதிலும், இதன்பின்னாலுள்ள பயங்கர ஆபத்து—சிங்களத்தைப் படிக்கத்தொடங்குவதன்பின்னாலுள்ள பயங்கர ஆபத்து—தெரிகிறதல்லவா? இன்று விருப்பபாடம் என்பார்கள்—அதிலே நாம் மயங்கினால், நாளை போதனாமொழி சிங்களமே என்பார்கள்! இதுவே சிங்கள ஏகாதிபத்தியத்தின் திட்டமிட்ட வலைவிரிப்பாகும்!

இத்தகைய வலைவிரிப்பில் மயங்கிடாது திருமலை நடராசன் போன்ற தியாக வீரர்களின் இரத்தத்தில் உருவான இந்த இயக்கத்தை கட்டிக்காத்து, தமிழனின் விடுதலையை —தமிழ் மொழியின் விடுதலையை நிலைநாட்டி இலங்கையின் சுதந்திரத்தை முழுமைப்படுத்துவதென்று பெப்ரவரி 4ல்— தியாகி நடராசனின் மீது ஆணையிட்டு உறுதியேற்போம்!

அன்புத்தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம் வந்து 30 ஆண்டுகளில் 2000 சதுரமைல்

# தமிழர் நிலம் ஆக்கிரமிப்பு!

## சிங்கள காலனித்துவத்தின்கீழ் தமிழன் படும்பாடு!

16ம் நூற்றுண்டிலிருந்து ஈழத்தமிழர்களாகிய நாம் காலனித்துவ ஆட்சிகளின்கீழ் அல்லலுற்று வருகிறேம். முன்பு ஐரோப்பிய எஜமானர்களுக்கு கீழேயிருந்தோம்; இப்போது சிங்கள குடியேற்றவாத ஆட்சியின்கீழ் இருக்கிறேம். எங்கள் பிரதேச அபிவிருத்திக்காகவும், எது மக்களின் முன்னேற்றத்துக்காகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை நாம் பாராட்டுகிற அதே வேளையில்—"உண்மையான சுதந்திரமின்றி, ஆக்கபூர்வமான அபிவிருத்தி யெதுவும் ஏற்படமுடியாது" என்ற கருத்தை ஒவ்வொரு தமிழனுக்கும் இடித்துக்கூறவிரும்புகிறேம். எந்தஒரு காலனித்துவ ஆட்சியும், தனக்குகீழ் உள்ள குடியேற்றநாடுகளை அபிவிருத்தி செய்வதன்மூலம் தனது கழுத்தில் தானே கத்திவைப்பதற்கு ஆயத்தமாக இல்லை! அப்படி நடந்தால் அது பெரிய கேலிக்கூத்தாகவே முடியும்.

கடந்த 30 ஆண்டுகளாக நில அபிவிருத்தி என்ற போர்வையின்கீழ், 2000 சதுரமைலுக்கு மேற்பட்ட எங்கள் தமிழ்ஈழ நிலப்பரப்பு துப்பாக்கிமுனையில் அபகரிக்கப்பட்டுள்ளது. இதில் சேருவலையில் 600சதுரமைல்களும் அம்பாறையில் 800 சதுரமைல்களும் அபகரிக்கப்பட்டுள்ளது. கல்குடா தொகுதியிலுள்ள வடமுனையில் காடுகளைவெட்டி குடியேறிய நிலமற்ற தமிழர்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டு, அந்த இடத்தில் 100 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன; வவுனியாவிலுள்ள தச்சன்குளம் என்ற ஊரிலிருந்து 200 தமிழ்க்குடும்பங்களை வெளியேற்ற முயற்சிகள் நடைபெறுகின்றன—புதிய இராணுவமுகாம் அமைப்பதற்காக. கொண்டச்சியிலுள்ள ஆசியாவிலேயே மிகப்பெரிய கஜு தோட்டப் பகுதிகளில் இராணுவக் காவலுடன் ஆயிரக்கணக்கான சிங்களவர்களைக் குடியமர்த்த முயற்சிநடக்கிறது.

கடற்றெழில் அபிவிருத்தியென்ற போர்வைகன்கீழ் எங்கள் தமிழ்ஈழக் கடற்கரைகளின் கால்வாசிப் பகுதி அரசு ஆதரவுடன் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. கொக்கிளாய், பேசாலை, சிலாபத்துறை, சுண்டிக்குளம், திருகோணமலை, மட்டக்களப்பு போன்றவையே ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. மயிலிட்டி மீன்பிடித்துறை முகத்துக்கு இடப்பட்ட அத்திவாரக்கல் வெறும் சமாதித் தூண்போல கிடக்க, தெற்கிலுள்ள தங்காலையில் மீன்பிடித்துறைமுகம் எழுகிறது.

ஐரோப்பிய காலனிஆட்சியின்கீழ். நாங்கள் விரும்பிய இடத்தில் குடியேறுவதற்காவது அனுமதி இருந்தது. இப்பொழுது எங்கள் பிரதேசத்தில்கூட நாங்கள்விரும்பிய இடத்தில் குடியேறமுடியாது.

நாங்கள் 8இலட்சம் தமிழர்கள், 400 சதுரமைல்களுக்குள் வாழமுடியாது திக்குமுக்காடும்போது, சிங்களவர்கள் எங்கள் பிரதேசங்களுக்குள் ஏன் வந்து நுழைய வேண்டும்? விரைவில் நாம் கடலுக்குள் விழவேண்டும். அதுகூட நம்பிக்கையில்லை. ஏனெனில், அவர்களுடைய துப்பாக்கி பொருத்தப்பட்ட ஏராளமான இயந்திரப்படகுகள் எங்கள் கடலோரங்களை சுற்றிவளைத்துக்கொண்டு நிற்கின்றன.

இந்த நிலையில், ஜோர்டானின் மேற்குகரையோரங்களில் யூத குடியேற்றங்களை எதிர்க்கும் சிறிலங்காவின் சிங்கள ஆட்சியாளர்களின் தார்மீகத்தை உலகநாடுகள் பார்த்து ரசிக்கட்டும்!

தமிழ்ஈழ அபிவிருத்தியில் சிங்களஅரசு காட்டும் அக்கறைதான் எந்த அளவுக்கு இருக்கிறது?

மூலப்பொருட்களும் இயந்திரசாதனங்களும் இறக்குமதிசெய்வதற்கு அனுமதிமறுப்பதன் மூலம், தமிழ்பகுதியில் கைத்தொழிற்சாலைகள் உருவாகுவதற்கு முட்டுக்கட்டைபோடப்படுகிறது.

எங்கள் தமிழ் ஈழத்தில் விளையும் உற்பத்திபொருட்களை சந்தைப்படுத்துவதற்கு போதிய வசதிகள் செய்து தரப்படவில்லை!

வடக்கில் இருக்கும் தொழிற்சாலைகளைவிட இங்கிருக்கும் ஆயுதப்படை முகாம்களே அதிகம்!

மகாவலி அபிவிருத்திக்குக்கொட்டப்படும்பலகோடிக்கணக்கான வெளிநாட்டு உதவிகளால், தமிழ்ஈழம் வளம் அடையப்போவதில்லை!

எங்கள் மூளைகளைப் பயன்படுத்தி அவர்கள் தமதுபிரதேசத்தை அபிவிருத்திசெய்துகொள்ளுகிருர்கள். சர்வதேச நாணயச் சபையிடமிருந்து இதற்கெனப் பெறும் கடன் சுமையை எமது தலையிலேயும் கட்டியடித்துவிடுகிருர்கள்;

40,000பேர் நம்மில் அகதிகளாக்கப்பட்டோம்—எங்கள் சொந்தப் பூமியிலேயே! அகதிகளுக்கென வெளிநாடுகள் கொடுத்த உதவிகளுக்கு என்ன நடந்தது?

பலகோடிக்கணக்கான எமது சொத்துக்கள் சட்டத்தின் பாதுகாவலர்களின் துணையுடன் கொள்ளையடிக்கப்பட்டதை நாம் மறந்துவிடமுடியுமா?

சிங்கள ஆட்சியின் தயவை நம்பி, அவர்களது சப்பாத்துக்களை நக்கி வாழுவோரால், ஈழத்தமிழர்களின் வரலாற்றை எழுதமுடியாது!

[சிலமாதங்களுக்கு முன் யாழ்வளாகத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திபற்றிய ஆலோசனை மாநாட்டின்போது ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட ஓர் பிரசுரத்தின் தமிழாக்கம் இது.]

## தந்தைக்கு நன்றி

தமிழன் தன்னனூர்வில் நன்றியுள்ளவன் தமிழன் தன்னுழைப்பின் முதற்பலனைத் தந்தையாம் இறைவனுக்குத் தக்க நன்றியுடன்கொடுத்த விழா பொங்கி எழுந்த பொங்கல் விழா;

ஈழத்தமிழன் நன்றியுள்ளவன். நன்றியுணர்வுடன் இந்த நல்ல நாளிலே நாட்டவந்துள்ளான் அடிக்கல். தந்தை செல்வாவைத் தந்த இறைவனுக்கு நன்றியாகத்தமிழனின் முதற்கனியான செல்வமதைக் கொடுக்க வந்த இந்தப் பெருவிழாவில் தந்தையத் தந்த தந்தாய் உமக்கு நன்றி!

நன்றியோடு சேர்ந்த ஒரு வேண்டுதல் ஈழத்தமிழனின் பயணத்தில் இறைவா நீயே அவனின் வாழ்வுக்கு ஒளியாகவும் வழியாகவும் அமைந்து உண்மையில் நிலைத்து உயிர்கொடுக்க வேண்டுகின்றேம். அவன் பாதையில் நீரே அவனின் பாதுகாப்பும் பலமுமாய் அமைந்து, அவனை ஆசீர்வதிக்க ஆண்டவன் இயேசு வழியே வேண்டி நிற்கின்றேம்—ஆமென்;

நன்றி

—வண. சுவாமி பிலிப்,
(தந்தை செல்வா நினைவாலய அடிக்கல் நாட்டு விழாவில் அருளியது)

## லண்டனில் ஆர்ப்பாட்டத்திலீடுபட்ட தமிழ் இளைஞர்கள் விடுதலை

இலண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் முன் ஈழத்து இனக் கொலையை கண்டித்து ஆகஸ்ட் 26-ம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கைதான மூன்று தமிழ் இளைஞர்கள் நீதி மன்றத்திற்கு கொண்டு வரப்பட்டனர், அந்த மூன்று உணர்ச்சி மிகுந்த தமிழ் இளைஞர்களும் 125 பவுண் அபராதத்துடன் விடுவிக்கப்பட்டனர், இளைஞர்களின் அபராதப் பணத்தை லண்டன் ஈழவிடுதலை இயக்கம் விரைந்து கட்டி உதவினர்கள். அந்த மூன்று இளைஞர்களுக்கும் வழக்காட சட்டத்தரணியையும் ஈழவிடுதலை இயக்கமே ஏற்பாடு செய்து கொடுத்தது.

—தகவல்: க. இளங்கோ, நமது லண்டன் நிருபர்


## லாலா சோப் ஸ்தாபனத்தாரின் அன்பான வேண்டுகோள்

பாடசாலைப்பிள்ளைகளின் நன்மைகருதி 5-ம் வகுப்புக்கு கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்கு இலவசமாக வாய்ப்பாட்டு மட்டைகள் வழங்குவதற்கு முன்வந்து இருக்கிறேம். ஆகவே, தயவு செய்து ஒவ்வொரு தலைமை ஆசிரியர்களும் தங்களின் பாடசாலை (லெட்டர் கெட்.) காகிதத்தில் எத்தனை வாய்ப்பாடு மட்டை தேவை என்பதை அறியத்தரவும். இப்பிரசுரத்தை எங்களுடைய தமிழ் உயிர் பத்திரிகையாகிய சுதந்திரனில் வெளியிட்டு உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

அனுப்ப வேண்டிய முகவரி:

**பொன், வன்னியசிங்கம்,**
**லாலா சோப் தொழிற்சாலை,**
**அச்சுவேலி.**


## வேல்

### ஆனந்தனின் 'பஸ்மாசூரம்'

கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் புதிய நாட்டிய நாடகமான 'பஸ்மாசுரம்' இம்மாதம் 10ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்படுகிறது.


## ஓர் அறிவித்தல்!

மில்க்வைற் தயாரிப்புக்களை
அப்புத்தளை — சரவணா ஸ்ரோர்ஸ்
பதுளை — எம். எஸ். சரவணமுத்து,
பண்டாரவளை — குகன் ஸ்ரோர்ஸ்.

ஆகிய வர்த்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வர்த்தக வலயம் சோசலிசத்துக்கு முரணானது!

## பேரவையில் கதிரவேற்பிள்ளை விளக்கம்!

"தமிழர் விடுதலைக்கூட்டணியினராகிய நாங்கள் இந்த சுதந்திர வர்த்தக வலய மசோதாவை ஒரு தத்துவத்தின் அடிப்படையிலேயே எதிர்க்கிறோம்.

"தனித் தமிழ் நாடொன்றை உருவாக்குவதில் ஆர்வமும் அக்கறையும் காட்டுகின்ற தமிழர் விடுதலைக்கூட்டணி, சிங்கள நாட்டில் ஏற்படுத்தப்படும் ஒரு திட்டத்துக்கு ஏன் எதிர்ப்புக்காட்ட வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் நாம் இன்று இந்த தேசிய அரசுப் பேரவையில் ஒரு பங்கினராக இருக்கிறோம், உங்கள் சுதந்திர வர்த்தகவலயம், தமிழ்பேசும்மக்களின் தாயகமாகிய தமிழ் நாட்டரசுக்குள்ளும் எதிர்காலத்தில் ஊடுருவும்.

"நீங்களும், நாங்களும் ஜனநாயக சோசலிச சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு பிரதிக்ஞை செய்திருக்கிறோம். இதிலிருந்து நீங்கள் விதிவிலக்குப் பெற்றுவிடமுடியாது. ஒரு சோசலிச சமுதாயத்தில் 200 சதுரமைலைத் தனியாகப் பிரித்தெடுத்து அதிலே முதலாளித்துவ அமைப்பை உருவாக்கப் பார்க்கிறீர்கள். ஏன் இந்த விதிவிலக்கு அளிக்கப்படுகிறது என்பதே எமது கேள்வி. இது கன்னி மாடத்தில் நிர்வாண முகாம் அமைப்பது போன்ற செயலாகும். அதைத்தான் நீங்கள் செய்கிறீர்கள்: அது மட்டுமன்று;

"ஒருமுறை நிர்வாண முகாமில் பதிவுசெய்துகொள்ளும் எவரும் கன்னிமாடத்தில் எங்குவேண்டுமென்றாலும் போகலாம் என்று கூறுகிறீர்கள். சுதந்திர வர்த்தக வலயம் ஆரம்பிக்கப்பட்டவுடன், நாட்டில் எந்தப் பகுதியிலுள்ள எந்தத்தொழில் நிறுவனமும் சுதந்திரவர்த்தக வலயத்தின்கீழ் பதிவு செய்யப்படலாமென்று கூறுகிறீர்கள். ஆகவே இது கன்னிமாடத்தில் உள்ள நிர்வாணமுகாமாக மட்டும் இருக்காது—இது ஓர் OCTOPUS முதலாளித்துவமாகஇருக்கப்போகிறது. இந்த நோய் நாடுமுழுவதும்பரவப்போகிறது நீங்கள் எங்கு வேண்டுமென்றாலும் எதையும் பதிந்து முதலாளித்துவ தத்துவத்தை புகுத்த முடியும். அதையே இப்போது செய்ய முயற்சித்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

"நீங்கள் ஒன்றைச் செய்வதாக உறுதியளித்துவிட்டு அதற்கு எதிர்மாறான மற்றொன்றை செய்கிறீர்கள், நீங்கள் குறிப்பிட்ட 200 சதுரமைல் பகுதிக்குள் மட்டுமல்ல —நாடுமுழுவதையும் முதலாளித்துவ முகாம் ஆக்குகிறீர்கள். அதை மறந்துவிடவேண்டாம்.

"மனிதனை மனிதன் சுரண்டக் கூடாது என்ற கொள்கையை ஏற்றுக்கொண்ட நீங்கள், இந்த நாட்டிலுள்ள தொழிலாளர் உழைப்பை வெளிநாட்டு முதலாளிகள் சுரண்டுவதற்கு கதவு திறந்து வழிவிடுகிறீர்கள். உள்ளூர் தொழிலாளர்களை வெளிநாட்டு முதலாளிகள் சுரண்டப் போகிறார்கள். இது தார்மீகத்துக்கு விரோதமான செயலாகும். ஒரு 'தர்மாரிஷ்ட' அமைப்பில் இதற்கு இடமிருக்கக் கூடாது.

திரு. ஹரிச்சந்திர கொரயா: "யூகேசிலேயாவில் என்ன நடக்கிறது?

கதிரவேற்பிள்ளை:—"நான் எங்களைப்பற்றியும், உங்களைப் பற்றியுமே பேசுகிறேன். நாம் சோசலிசக் கொள்கைக்கு கட்டுப்பட்டவர்கள். அரசியலில் மட்டுமல்ல— பொருளாதாரத்தில் மட்டுமல்ல—சோசலிசத்தை ஒரு வாழ்க்கை முறையாக ஏற்றிருப்பவர்கள் நாங்கள்.

"சோசலிசத்தால் பொருளாதார அபிவிருத்தி சாத்தியப்படாது என்று நீங்கள் கருதினால், அதை கைவிட்டு விடுங்கள், ஆனால் சோசலிசவாதிகளாக நடித்துக் கொண்டு முதலாளித்துவத்தை உருவாக்காதீர்கள். இதுவே எனது அடிப்படையான எதிர்ப்பு. இதனால்தான், சோசலிசத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணி இந்த சுதந்திர வர்த்தக வலய மசோதாவை எதிர்க்கிறது."

— (19-1-78ல் தேசிய அரசுப்பேரவையில் பேசியது.)

---

## கொழும்பில் கருத்தரங்கு

கொழும்பு சுடர் கலை இலக்கிய மன்றத்தின் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் மாசி மாதம் 11-ம் திகதி (11-2-78) சனிக்கிழமை மாலை 6 மணியளவில் 676, காலி வீதி, கொள்ளுப்பிட்டியிலுள்ள அரசாங்க எழுதுவினைஞர் சங்கப்பணிமனையில் மறைத்தலைவர் திரு. க இராஜமனோகரன் அவர்களது தலைமையில் நடைபெறும். திரு. எஸ். வி. சந்திரகாசன், திரு. ஈழவேந்தன் திரு, காசி ஆனந்தன் ஆகியோர் முக்கிய பிரமுகர்களாகக் கலந்துரையாடலில் பங்கு பற்றுவார்கள். 'சுடர்' சஞ்சிகையின் எழுத்தாளர்கள் கவிஞர்கள், வாசகர்கள், தமிழ் அபிமானிகள் மற்றும் சுடர் கலை இலக்கிய மன்ற உறுப்பினர்கள் ஆகியோரை கலந்துரையாடலில் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

---


பாவியுங்கள்




றேயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றுமோர் தயாரிப்பு

றேயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றேயல் பேக்கிங்பவுடர்
றேயல் கஸ்டட் பவுடர்
றேயல் கோண் பிளவர்
றேயல் பிஸ் மக்ஸ்
றேயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இன்டஸ்ரீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11


---

## தனிநாடு உரு

—7-ம் பக்கத் தொடர்

மறைந்தார். 10 வருடம் சென்றபின் அவரது கனவு நனவாகியது. பாகிஸ்தான் என்ற சுதந்திர நாடு உருவாகியது.

அரசியல் ஞானியான இக்பால் அரசியல் சித்தாந்தம் வடித்துக்கொடுத்தார். மனிதன் அச்சமற்றவனாக வாழவேண்டும் எனக் கவிதைகளில் கூறினார். மனிதனை மனிதனாக வாழவேண்டும் என்பதே அதன் சாராம்சமாகும்.

தனிமனிதன் கட்டுக்கதைகளிலிருந்து விடுதலைபெறவேண்டும் இனங்கள் விடுதலைபெறவேண்டும், உலகில் எங்கும் எதிலும் விடுதலையான சமுதாயத்தைக் காண துடித்தார். அவர் ஒரு தத்துவஞானியாகவும் விளங்கினார்.

உலகப் பல்கலைக் கழகங்களில் அவரதுகவிதைகள்பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உலகில் என்றும் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டார். பலநூற்றுண்டுக்கு ஒருமுறைதோன்றும் கவிஞர்கள் கவிதா பொக்கிஷத்தைக் கருத்துக் [illegible]

நாம் அக்கருத்துக்களை வாழ்நாளில் கைக்கொள்ளவேண்டும்;

கவிஞர் இக்பாலின் கற்பனையில் உதித்த கருத்தில் பாகிஸ்தான் என்ற சுதந்திர நாடு மலர்ந்துள்ளது.

எங்கு அடிமைத்தனம் சுரண்டல்; மனிதன் நசுக்கப்படுகின்றானோ, அங்கு அவர் குரல் எழுந்தது. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் மூலம் உலக சமுதாயத்தை காண நாம் உழைப்பதுதான் அவருக்கு செய்யும் அஞ்சலியாகும்,

—இவ்வாறு யாழ் உஸ்மானியாக் கல்லூரியில் 28.1.78 மாலை நடைபெற்ற அமரர் இக்பால் நூற்றாண்டு தின விழாவில் பேசிய தமிழினத் தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

---

## பாலசூரியாவின் வெளியீட்டில்...

—3-ம் பக்கத் தொடர்

சிங்கல—முஸ்லீம் கைகலப்புகள் நிகழ்ந்ததைஏன் சுவாமியார் சுட்டிக்காட்ட மறந்து விட்டார்?

(8) எஸ்.எம். கிருஷ்ணன் என்பவர் 'அத்த' பத்திரிகையில் 'அருந்ததியர் சமூகத்'தைப் பற்றி எழுதியிருந்ததைத் தொகுத்து திரு. பெரேரா என்பவர் இரு பக்கங்கள் நிரப்பியுள்ளார். இச் சமூகத்தைப் பற்றி எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையல்ல இது. கட்சிப்பிரசார நோக்கில், எழுதப்பட்டுள்ளது என்பதை இது வெளிவந்துள்ள பத்திரிகையும், "அஸீஸ், தொண்டமான் அல்லது த. வி. கூ. போன்ற வலது சாரியினரை தமது சமூகம் நம்பியிருக்காமல், இந்நூற்றாண்டின் முதற் தசாப்தத்திலிருந்து இடதுசாரிக் கொள்கைகளையே பின்பற்றுகிறது "எனக்கூறப்பட்டதாக அமையும் கடைசி வாசகமும் தெரிவிக்கின்றது."

இந்நூற்றாண்டின் முதற் தசாப்தத்தில் இலங்கையில் எங்கேய்யா இடதுசாரிஇயக்கம் இருந்தது? ரஷ்யாவிலேயே இரண்டாம் தசாப்தத்தில்தானே, இடதுசாரிப் புரட்சி வெற்றிகண்டது? இதுமாதிரியான பிரச்சாரச் செய்திகளைக்கூட, சுவாமியார், அவை த. வி. கூ.க்கு எதிரானதாக இருப்பின், பயன்படுத்தத் தயங்கார் போலும்!

அது சரி, தமிழ் மக்களிடையே அருந்ததியர் சமூகத்திற்காகக் கண்ணீர்வடிக்கும் சுவாமியார் தி. பா., சிங்கள சமூகத்திற்கிடையே இதே மாதிரி, அல்லது இதனிலும் இழிவாக நடாத்தப்படும் 'றொடியா' சாதியினரைப் பற்றி ஒரு வரி கூடக் குறிப்பிடாதது ஏன்? இச்சாதியினர்கூட பிச்சையெடுத்து உண்ணும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனரே! 'றொடியா' சாதியினரைப் பற்றிய தகவல்களை மறைத்தால், வெளிநாட்டாருக்கு "சிங்களவரிடையே சாதியில்லை; தமிழரிடையே மட்டுந்தான் சாதி வேற்றுமையுண்டு." எனப் பிரச்சாரஞ் செய்யலாம் என சுவாமியார் நினைத்திருப்பார் போலும்!

(9) '77இனக்கலவரம் நேர்ந்ததற்கு முக்கிய காரணம், சமூக—பொருளாதார பின்னணிக்காரணிகளேஎன்றும், அத்துடன் த. வி. கூ.யினரின் மிகைப்படுத்தப்பட்ட தனிநாட்டுக்கோரிக்கை—போராட்டம் போன்றவற்றால் தூண்டப்பட்டதா லேயே சிங்களமக்கள் ஆத்திரங்கொண்டெழுந்தனர் என்றும், சமூகத்திலே வேலையற்ற சிங்களவர்களுடன் ஒப்பிடுகையில் உயர்ந்தரகத்திலே, தொழில் பார்த்துக் கொண்டிருந்த கடைக்காரர்கள், கடலைக்காரர்கள், பழைய பேப்பர், போத்தல் விற்பனையாளர்கள் போன்றோரே தாக்கப்பட்டனர் என்றும் சுவாமியார் தி. பா. குறிப்பிட்டுள்ளார்.

அப்போ, தமிழ்ப்பெண்கள், பச்சிளங்குழந்தைகள் ஏன் தாக்கப்பட்டனர்? இந்திய வம்சாவளித் தாய்க்குலத்தினர் தம் மதிப்பிற்குரிய கற்பை மிருக உணர்ச்சி படைத்தோரிடம் இழந்ததற்கும் சமூக—பொருளாதார சூழலா காரணம்? 2500 ஆண்டுகாலம் பேணப்பட்டுவந்த பகவான் புத்தரின் போதனைகளைக் கூட, காம வெறியர்கள் சமூக—பொருளாதாரப் பின்னணி காரணமாக புசித்து ஏப்பம் விட்டு விட்டார்களா! நடைபெற்ற கற்பழித்தல் சம்பவங்கள் பற்றி ஒன்றுமே சுவாமியார் குறிப்பிடவில்லையே! கற்பழிப்பு (rape) என்ற சொல்லே இடம்பெறவில்லை!-இச்சொல் 'தம்மதுவீபத்'திற்குப் பொருந்தாது என சுவாமியார் விட்டுவிட்டார் போலும்!

சமூக — பொருளாதார சூழலே கலவரத்திற்குக் காரணமெனக்கொண்டால், கடலைக்காரர்கள், பழைய பேப்பர் — போத்தல் விற்பனையாளர்களைத் தாக்குவதிலும் பார்க்க, குண்டன்மார்கள், ஹைதராமணிகள், மூசாஜீக்கள், லால்சந்துகள் போன்ற பணமுதலைகளின் தேட்டங்கள் கூடிய ஆதாயத்தை சிங்கள இனக்கும்பலுக்கு கொடுத்திருக்குமே! இப் பணமுதலைகளின் பொக்கிஷங்கள் மீதுஏன் கைவைக்கப்படவில்லை? சுவாமியார் விளக்குவாரா?

மேலும், த. வி. கூ. தலைவர்களினதும், இளைஞர்களினதும் பேச்சுக்களை இனக்கலவரத்திற்குக் காரணங்காட்டும் சுவாமியார், கலவரந் தொடங்குவதற்கு ஒரு கிழமை முந்தி 'தவச'குழுவின் பத்திரிகைகளில் வெளிவந்த சிங்களத் தீவிரவாதி எப். ஆர்; ஜயசூரியாவின் கட்டுரைகளைக் கண்டித்து ஒரு வரி கூட எழுதவில்லையே! "தமிழர்களையெல்லாம் இந்தியாவுக்குத் துரத்துங்கள்" என்று இனத்துவேஷக் குரலெழுப்பியவரைக் கண்டிக்க சுவாமியார் தி.பா. திராணியற்றிருப்பதேன்?

---

## 4 முஸ்லிம் கடை தீக்கிரை

காலியில் அண்மையில் நடைபெற்ற சிங்கள - முஸ்லிம் கலவரத்தின்போது நான்கு முஸ்லிம்களின் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---


## சுதந்திரன் சந்தா

ஓராண்டுச் சந்தா ரூ. 50.00
அரை ஆண்டு ,, ரூ. 25,00

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

"சுதந்திரன்"
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ் பண்பாட்டியக்க முதல் மாநாடு—

## —ஒரு கண்ணோட்டம்

**க. இராஜமனோகரன்**

1977 மார்கழி பதினெட்டாந் திகதி இரவு வி.ஜி.பி. தங்கக் கடற்கரையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளுடன் மாநாடு இனிதே நிறைவேறியது, பிளாஸ்ரிக் உறையிடப்பெற்ற கைக்கடக்கமான பாரதியார் பாடல்கள் என்ற நூலைப் பரிசளித்த வி.ஜி.பி. சகோதரர்களே இரவு உணவினையும் எமக்களித்தனர். முடிவுற்ற மாநாட்டின் தொடர்ச்சிகளாகவே அடுத்து வந்த நாட்களின் நிகழ்ச்சிகள் அமையப் பெற்றன.

திங்களன்று காலையுணவை அமைச்சர் ராஜா முகம்மது அவர்கள் அளித்தாரெனினும் அந்நிகழ்ச்சிக்கு அவரின் சகோதரரே வந்திருந்தார். அதன் பின்னர் தமிழகவரசாலே ஒழுங்கு செய்யப்பட்ட பெருந்தொன்றின் மூலம் வள்ளுவர் கோட்டம் அடையாறு ஆலமரம் என்பன போன்றவற்றைப் பார்வையிட்டோம். இன்னும், வேலைகள் யாவும் முடிவுறு நிலையிலே விளங்கும் வள்ளுவர் கோட்டமானது வள்ளுவன், அவன் அருளிய குறள் அவற்றின் பெருமைகளை உணர்ந்த கலைஞரின் மதிநுட்பம், இவையாவற்றுக்கும் அடித்தளமாக விளங்கும் அன்னைத் தமிழ் ஆகிய யாவும் கோயில் கொண்டருளியுள்ள இடமாகவே நிகழ்கின்றது. அருங்கலைக்கூடமாக விளங்கும் அதன் அருமை பெருமைகளை நன்கு விரித்துரைப்பதாயின் அதற்கென நீண்டதொரு கட்டுரையே எழுதப்படவேண்டும். அடுத்து யாம் பார்வையிட்ட அடையாறு ஆலமரமும் தன் அளவினாலே உலகப் பெருமையினைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. மூப்பின் விளிம்பில் நிற்கும் அத்தனிமரம் எண்ணற்ற விழுதுகளின் துணைகொண்டு சிறு காடாகக் காட்சி தருகின்றது. இதுவே இப்போ திரைகளிலே காண்பிக்கப்படும் 'மூன்று முடிச்சு' படத்திலே வரும் மரமுமாம்.

### எம். ஜி. ஆர். விருந்து

இவ்வாறனவற்றைக் கண்டுகளித்த எம்மைத் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தாஜ் கொரோமெண்டல் ஹோட்டலில் Taj Coroman- Hotel) வைத்துவரவேற்று நண்பகல் உணவினையும் வழங்கினார். விருந்து முற்றிலும் மேலை நாட்டுப் பாணியிலே அமைந்திருந்ததெனினும் என் போன்ற சைவ உணவாளரைத் தனியாகக் கவனிக்கப் பெற்றதான அந்த விருந்திலே முதல்வர் ஆற்றிய உரையில், 'தமிழ் மக்கள் உலகின் எந்த நாட்டிலே வாழினும் அவர்களின் நலனை, உணர்வுகளைக் காப்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கும்' என்றும் எதிர்காலத்திலே இவ்வாறான மாநாடுகளை நடத்த விரும்புபவர்கள் அதனை முன்கூட்டியே தமிழகவரசிற்குத் தெரியப்படுத்தினால் இங்கு ஆட்சிக் கட்டிலில் எந்த அரசு இருப்பினும் அது தனது முழு ஒத்துழைப்பினையும் நல்கும்' என்றும் கூறிய பகுதிகள் எம்மையெல்லாம் உற்சாகமடையச் செய்தன.

### மொறிஷியசில் அடுத்த மாநாடு

அந்த விருந்தின் போது பேராளர்களிடையே சேர்க்கப் பெற்ற ரூ. 501/- வெள்ளத்தாற் பாதிக்கப்பட்டோரின் நிதிக்கென முதல்வரிடம் கையளிக்கப்பட்டது. அன்றைய தினம் மாலை 4 மணியளவிலே உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் முதற் பேரவைக் கூட்டம் முத்தியாலுப் பேட்டையிலுள்ள மாணவர் மன்றத்திலே நடைபெற்றது. அடுத்த செயற்குழுவிற்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்ததோடு இரண்டாவது மாநாட்டை 1980ம் ஆண்டளவிலே மொறிஷியஸ்ஸிலே கொண்டாடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மாணவர் மன்றத்தினரின் உறுப்பினர் அறிமுகத்துடனாரம்பமான மேற்படி கூட்டத்தின் நடுவிலே அம்மன்றத்தினரின் சிற்றுண்டிகளினுடனான தேநீர் விருந்து எம்மை மகிழ்வித்தது. இரவு 9 மணியளவிலே புலவா பெருஞ்சித்திரனார் அவர்களைச் சந்திப்பதற்காக யானும் நண்பர் இளங்கோவும் தமிழக நண்பர்களான நந்திவர்மன், வேந்தன் ஆகியோரின் துணையோடு சென்றோம். மறைமலையடிகளின் வழி நடப்பவரும் ஈழத்தமிழருக்கெனவெழுதும் ஓரிரு இந்திய எழுத்தாளரில் ஒருவருமான புலவரின் வீடு மிகவும் எளிமையாகக் காட்சி தந்தது. 'தென் மொழி' ஏட்டின் மூலம் எம்மைப் பற்றி உலகுக்கு எடுத்தோதும் அவர் இன்மொழி ஓதி இனிதே உபசரித்தார். தான் பதிவுசெய்து வைத்திருந்த தமிழுணர்ச்சிப் பாடல்களை எமக்கும் போட்டுக் காட்டி மகிழ்வித்தார், இரவு 11.15 மணிவரை அவருடன் பேசிக்கொண்டிருந்து விட்டு விடுதியை அடைந்த யாம் மறு நாட்காலையிலே முதல்வேலையாக மீண்டும் புலவரையே சந்தித்தோம்; யாம் மாநாட்டில் வாசித்தகட்டுரைகளின் படிகளை அவரிடம் கையளித்தோம்.

'பாற்றேநீர் தந்துபசரித்த புலவர் பள்ளிப்பறவைகள், ஐயை, மகபுகுவஞ்சி போன்ற பாத்தேனூல்களையும் தன்னுணர்வு என்னும் கட்டுரை வெளியீட்டின் பிரதியொன்றையும் அன்பளிப்புச் செய்து எம்மை மகிழ்வித்தார். அங்கிருந்து மேற்குறிப்பிட்ட தமிழக நண்பர்களுடன் யாம் கலைஞரின் விடுநோக்கிச் சென்றோம். கலைஞர் வீட்டிலில்லாத காரணத்தால் சட்டவுறுப்பினர் விடுதி வளவினுள்ளமைந்துள்ள திமுக தலைமையகத்தை நோக்கி விரைந்தோம். அங்கும் கலைஞர் இல்லை. ஏறத்தாழ ஒரு மணித்தியாலத்திற்கு மேலாகப் பேராசிரியர் அன்பழகன் அவர்களுடன் ஈழத் தமிழர் நிலை குறித்து மனம் விட்டுப் பேசினோம்.

11-30 மணியளவிலே கலைஞர் அங்கு வருகை தந்தார். எமது கட்டுரைகளின் படிகளோடு, 'ஈழத்தமிழர் இறைமை'' தமிழீழம்-நாட்டு எல்லைகள்' என்னும் நூல்களையும் கலைஞரிடம் கையளித்து எம் நிலைபற்றி எடுத்துரைத்தோம். முன்னாள் அமைச்சர் ராஜாராம், ஆர்க்காடு வீராசாமி ஆகியோரையும் சந்தித்து உரையாடியயாம் புதுவை மாநில அமைச்சர் திரு. டி, இராமச்சந்திரன் அவர்களைச் சந்திப்பதற்காக அவரது இருப்பிடத்திற்குச் சென்றோம். அன்போடு உபசரித்த அவர் எமது இன்னல்களை மிகக் கவலையோடு விசாரித்தறிந்தார். எம்முடைய நண்பர் போலக் கனிவோடு பழகினார்.

அன்று மாலை எழும்பூரிலுள்ள பெரியார் திடலிலே செஞ்சி இராமச் சந்திரன் அவர்களின் தலைமையிலே மாபெருங் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. திருவாளர்கள், கு.தமிழ் மன்னன், ஏ. எஸ். மனைவைத்தம்பி ஆகியோரின் நன்முயற்சியாலுருவான மேற்படி கூட்டமானது மாலை 6. 30 மணியளவிலே ஆரம்பமானது. ஏறத்தாழப் பத்தாயிரம் மக்கள் அங்கு திரண்டிருந்தனர். எம்மையெல்லாம் மலர்மாலை சூட்டி வரவேற்றனர். திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் சி. வீரமணி, பாவலர் பெருஞ்சித்திரனார், இர. ந. வீரப்பன், இரா. கனகரத்தினம், முரசு நெடுமாறன், வீ. தேவகுமாரன், மு. தங்கணமுத்து. வே. இளங்கோ, ஆகியோரோடு யானும் அங்கு உரையாற்றினேன்.

யானும் நண்பரும் எமது இன்றைய நிலையை மிகவும் தெளிவாக எடுத்துக்கூறினோம். பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் எமது பேச்சுக்களைக் கேட்டனர். அந் நேரத்திலே அண்மையிலே நடைபெற்ற இனப் படுகொலையின்போது அங்கு ஊர்வலம் நடத்திய யாவர்க்கும் எமது நன்றியையும் தெரிவித்தோம். செஞ்சி. இராமச்சந்திரன், பெருஞ்சித்திரனார், சி. வீரமணி ஆகிய யாவரும் எமக்கு ஆதரவு நல்கிப் பேசினார்கள்,

### கலைஞர் உரை

இறுதியாகப் பேசிய கலைஞர் "இலங்கையில் அமளி என்றதும் இலங்கைக்குச் செல்லலாம் கொண்டுவா நம்முடைய படையை. என்றெல்லாம் அழைக்கத்தேவையில்லை; நம்முடைய உணர்வுகளைக் காட்டினாலே போதும்; இலங்கையில் இருக்கிற தமிழர்களுக்கு ஆதரவாக நான்கு கோடித் தமிழர்கள் இங்கே இருக்கிறார்கள் என்ற உணர்வு ஒன்றே அங்கேயிருக்கிற சிங்களவர்களைப் பணியவைக்கும்" என்றும், 'தாய்த் தமிழகத்தில் இருக்கின்ற நாங்கள் இலங்கை வாழ் தமிழர்கள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டாலும் அங்கே வெண்ணெய் உருகினாலும், மலேசியாவில் இருக்கிற தமிழர்கள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டாலும் அங்கே வெண்ணெய் உருகினாலும், நாங்கள் இங்கே கையில்லாத ஊமைகளாக இருந்தாலும், பாறையிலிருந்து நாங்கள் உருண்டு, நாங்கள் உருளுவதைப் பார்த்து ஏன் உருளுகிறான் என்று கவனித்து அதற்குப் பிறகாவது உருகுகின்ற வெண்ணெய்யைக் காப்பாற்ற மாட்டார்களா என்பதற்காக உயிரைத் துச்சமாக மதித்து நாங்கள் உங்களைப் பாதுகாக்கத்தயாராக இருக்கிறோம்! என்றும் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கவை. (கலைஞரின் பேச்சு முழுவதும் 30-12-77 இதழிலே வெளிவந்தது.)

மேற்படி கூட்டம் நிறைவுற்ற வேளையிலே ஏராளமான பொதுமக்கள் என்னையும் நண்பர் இளங்கோ அவர்களையும் சூழ்ந்து கொண்டனர். கண்ணீர் மல்க நின்று எம்மின்னல்களை விசாரித்தவர். எமக்காக—எம் தமிழ் மொழிக்காக —தமிழீழ விடுதலைக்காகத் தாம் எத்தியாகத்தையும் செய்யத் தயாராகவிருப்பதாக உறுதி கூறினர்.

மறுநாள் எமதுவிடுதியிலே எம்மை வந்து சந்தித்த தி. மு. க. வின் வட்டச் செயலாளர் திருமதி இராசம் நடராசன், அவரது கணவர், மகன் ஆகியோர் எமக்கு அன்பளிப்புகளை நல்கியதோடு சிற்றுண்டி விருந்தும் அளித்தனர்.

மறுநாளான வியாழலன்று மாலையிலே அண்மைக்காலம்வரை இலங்கையிலே வாழ்ந்துவந்த திரு. ரஹ்மான் அவர்களின் மூலம் அறிமுகமான இயக்குநர். திரு. ஆர். கே. இராமன் அவர்களின் துணையோடு வாஹினி, ஏ. வி. எம். ஆகிய ஸ்ருடியோக்களைப் பார்வையிட்டோம். வாஹினியிலே 'நான்கு மணிப்பூக்கள்' என்ற மலையாளப் படத்தின் 'தொகுப்பினை' (Editing) பொறியியலாளராகிய நாம் மிக ஆர்வத்துடன் பார்வையிட்டோம். அதன் பின்னர் ஏ. வி. எம். இலே படமாக்குதலைக் கண்டு களித்தவேளையிலே ஜெய்சங்கர், ஸ்ரீதேவி ஆகியோரின் சந்திப்பும் கிடைக்கப்பெற்றது.

அடுத்த நாளான வெள்ளியன்று காலை அண்ணா சமாதிக்குச் சென்று அஞ்சலி செய்த நாம் நண்பகல் சிதம்பரம் நோக்கிப் புறப்பட்டோம்.

(தொடரும்)

# "தனி நாடு உருவாக்கப்பாடிய கவிக்குயில்!"

## கவிஞர் இக்பாலுக்கு நாவலர் புகழாஞ்சலி

பல நூற்றாண்டுகளுக்கு முன் உலகில் அவதரித்த மகாகவிகளில் இக்பாலும் ஒருவராவர். உலகெங்குமுள்ள மக்களின் மதிப்பைப் பெற்றவரான கவிஞர் ஒரு கிராமத்தில் பிறந்தார், இந்தியாவில் கல்வி கற்று இளம் வயதிலேயே கவிதைகளை புனையத் தொடங்கினார்:

இலக்கணம் படித்து எதுகைமோனையுடன் கவிதை பாடியவரல்ல, ஆண்டவன் அருளினாலே உள்ளத்து உணர்ச்சிகளை கவிதைமழையாகப் பொழிந்தார், கவிதை ஊற்றுகளை அவர் கற்பனை சக்தியெனக் கூறினார்.

ஆண்டவன் அருளினாலே உள்ள உணர்ச்சிகளை கருத்துக்களை வடித்து, இறவாத புகழ்மிக்க இலக்கியம்படைத்து உலகிற்கு அளித்த மகா கவியாக தத்துவ ஞானியாக ஆசிரியராக, அரசியல் ஞானியாக மதிக்கப்பட்டார்.

மனித விடுதலைக்காகப் பாடுபட்டார். ஆண்டவன் பிரதிநிதியாக மனிதனைக் கண்டார். கட்டுக்கதைகளை ஒழித்துக்கட்ட, சுரண்டலை ஒழிக்க, மனிதன் வாழவேண்டும் என அழகுறப்பாடினார். சுரண்டி வாழும் சமுதாயத்தை எதிர்த்தார். இதற்கு எவர் தடையாக இருந்தார்களோ அவர்களைக் கவிதையால் சாடினார்.

மனிதன் வாழவேண்டும் என விரும்பிய அவர் இஸ்லாம் மதகோட்பாடுகளுக்கு அமையவேண்டும் என்பதை கவிதையில் இழையோடினார்.

1930-ம் ஆண்டு அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவராக [illegible] இரண்டு தேசிய இனத்தின் தாயகம் என்ற கருத்தை வெளியிட்டார். தேசிய தலைவர்களாக மகாத்மாகாந்தி, ஜவஹர்லால் நேரு போன்றவர்கள் இந்தியா ஓர் இனத்தைக்கொண்ட நாடுகோஷித்துக் கொண்டிருந்த நேரத்தில் தன் கருத்தை வெளியிட்டார்.

இந்து சமுதாயம்,முஸ்லிம் சமுதாயம் தனித் தனியாக வாழ்கிறது என்றார். முஸ்லிம் தனித் தேசிய இனம் என்றும் வடமேற்கில் பெரும்பாலான பகுதியில் முஸ்லிம்கள் வாழ்வதாகவும்,அப்பகுதியில்முஸ்லிம்கள் சுதந்திர தனி நாட்டை அமைக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார் இக்பால்.

1931ம் ஆண்டு அகில இந்திய முஸ்லிம்தலைவராக லண்டனுக்குச் சென்ற அவர் வட்டமேசை மகாநாட்டில் முக்கிய முஸ்லிம் பிரதிநிதியாக சென்று கலந்துகொண்டார். அந்த நேரத்தில் அவர் கூறிய கருத்து கசப்பாக இருந்தாலும் அவர் தூர திருஷ்டியாகக்கண்ட கனவு நினைவாகியது.

இக்பாலை என்பக்கம் அழைத்துக்கொள்ள நான் முயல்வதாக யாரும் நினைக்கலாம். ஒரு நாடாகக் கருதப்பட்ட இந்தியாவில் முஸ்லிம்கள் இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதைக் கூறி, முஸ்லிம்களுக்கு தனி நாடு அமைக்க இந்தியா உதவவேண்டும் என்று தெரிவித்தார்.

இக்பால் ஒரு நாட்டுக்கு மாத்திரம் சொந்தமானவரல்ல, உலக மகாகவியாக விளங்கினார். 1938ம் ஆண்டு அரசியல் ஞானி இக்பால்

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது; சுதந்திரன் 5-2-78

# கொழும்பு பிரெஞ்சு நட்புறவுச் சங்கம்

பிரான்சு நாட்டுக்கும் உலகத் தமிழ் மக்களுக்கும் நெடுங்காலமாகப் பண்பாட்டு உறவுகள் இருந்து வருவது தெரிந்ததே! அதிலும் சிறப்பாக றினிடாட், றீயூனியன், மொறிஷியஸ், மற்றும் கரீபியன் தீவுகள் பலவற்றையும், பாண்டிச்சேரி மாநிலத்தையும் சேர்ந்த தமிழ் மக்கள் பிரெஞ்சு மொழியில் நிரம்பிய பாண்டித்தியம் பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள். இவற்றுள் பாண்டிச்சேரி மாநிலம் தவிர்ந்த ஏனைய நாடுகளைச்சேர்ந்த தமிழ் மக்கள் தமிழ்மொழியை மறந்து வாழ்வதும் அறியப்பட்டதே மேற்படி நாடுகளைச் சேர்ந்த தமிழ்மக்களுடன் உலகத்தமிழர் பண்பாட்டு உறவுகளைத் தானும் ஏற்படுத்துவதாயின் அங்கு பிரெஞ்சு மொழியே இணைப்பு மொழியாகப்பயன்பட முடியும்.

தாய் மொழியாம் தமிழ் மொழியை மறந்து வாழும் தமிழர்களுடன் உலகத் தமிழர் பண்பாட்டு உறவை வளர்த்துக் கொள்ளுவதற்கான அரியதோர் வாய்ப்பை உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களுக்கு பிரெஞ்சு நட்புறவுச் சங்கம் ஏற்படுத்தித் தருகின்றது. பாரிஸ் நகரில் உள்ள அதன் தாய்ச் சங்கம் ஐரோப்பா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா, ஆசியாக் கண்டங்களைச் சார்ந்தநாடுகள் பலவற்றில் மொத்தம் 1250 கிளைச் சங்கங்களை நிறுவியுள்ளது. ஆசியாக் கண்டத்தில் மட்டும் 30,000 மாணவர்கள் பிரெஞ்சு நட்புறவுச் சங்கத்தின் கிளைச் சங்கங்களால் நடத்தப்படும்வகுப்புக்கள் மூலம் பிரெஞ்சு மொழியை இலக்கண சுத்தியுடன் படித்து வருகிறார்கள்.

கொழும்பில் இயங்கும் மேற்படி சங்கத்தின் இலங்கைக் கிளை கொழும்பிலும், கண்டி, காலி, யாழ்ப்பாண மாவட்டத் தலை நகரங்களிலும் மாலைநேர பிரெஞ்சு வகுப்புக்களைநடத்திவருகின்றன. இங்கு பிரெஞ்சு மொழியைச் சொல்லித் தருவதுடன், மாணவர்களுக்கான பிரத்தியேக திரைப்படக் காட்சிகளும் ஒழுங்கு செய்யப் படுகின்றன. அத்துடன் வருடாந்தம் பொதுமக்கள் கண்டு களிப்பதற்காக பிரெஞ்சு மொழித் திரைப்பட விழாக்களையும் சங்கம் ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

யாழ்ப்பாணம், கண்டி, காலி மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டுபிரெஞ்சுமொழியைப் படிப்பதில் அதிக சிரத்தை எடுத்துவருகிறார்கள். உலகத் தமிழர் நலனிலும், ஒற்றுமையிலும்நாட்டமுடையோர் இந்த வாய்ப்பைத் தவறவிடக் கூடாது என்று உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தைச் சேர்ந்தவர்களும்வற்புறுத்தி வருகிறார்கள்.

றினிடாட், மொறிசியஸ், றீயூனியன், மற்றும் கரீபியன் தீவுகளில் வதியும் தமிழர்களுடன் பேறு நட்பையாவதுவளர்த்துக் கொண்டு பண்பாட்டு உறவை வழர்த்துக் கொள்ள பிரெஞ்சு மொழி அறிவு அவசியம்என அவர்கள் கருத்து வெளியிடுகிறார்கள்.

ஆகவே, கொழும்பு பிரெஞ்சு நட்புறவுச்சங்கம் கொழும்பு, காலி, கண்டி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் நடத்தி வரக்கூடிய பிரெஞ்சு வகுப்புக்களைத் தமிழ் மக்கள் தகுந்தபடி உபயோகித்துப் பயன் பெற முன்வரவேண்டுமென்று உலகத் தமிழர் நலனில் அக்கறையுடையோரால் வற்புறுத்தப்படுகிறது. -இன்பரசு


செல்லமகால் (கொட்டாஞ்சேனை)

5-ம் வாரம்

றீகல் (மட்டுநகர்)

கணேஷ் பிலிம்ஸ்சார் அளிக்கும்



கணேஷ் பிலிம்ஸ்

நான் உங்கள் தோழன்

கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

7-வது வாரம்

முத்துராமன், ஸ்ரீகாந்த், வி. கே. ராமசாமி
தேங்காய் சீனிவாசன், ஜெயசித்ரா
எஸ். வி. ராமதாஸ், குமாரி பத்மினி
சுருளிராஜன், எம். பானுமதி
மாஸ்டர் குமார், ஜெயவாணி
ஐ. எஸ். ஆர். கண்ணையா, ஹலம்

— நடித்த —

இன்ஸ்பெக்டர் மனைவி

கெப்பிட்டல் (கொழும்பு)

கே. ஆர். விஜயா—ஜெய்சங்கர் நடித்த-

மேஜர் மீனாட்சி

லிடோ (யாழ்ப்பாணம்)

கடைசி வாரம்

எம். ஜி. ஆர்., லதா

— நடித்த —

நீதிக்கு தலை வணங்கு

(ஈஸ்ட்மன் கலர்)

கிங்ஸ்லி (கொழும்பு)

12-வது வாரம்

கமலஹாசன், ரஜனிகாந்த்,
ஸ்ரீதேவி, விஜயா நடித்த-

கே. பாலசந்தரின்

மூன்று முடிச்சு

வெலிங்டன் (யாழ்நகர்)

எம்ஜி ஆர் நடித்த— கணவன்

(புதிய கொப்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.